உ

# தமிழ்ப் பொழில்.

தஞ்சை, கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| | | |
|---|---|---|
| துணர் ௪. | விபவ—ஆவணி, புரட்டாசி. | மலர் ரு, சு. |


உ

## இராசராசன்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி 90-ஆம் பக்கம்.)

இனி, இவன்காலத்தில் செம்பினாலும் பொன்னினாலும் செய்யப்பெற்ற காசுகள் இருந்தன. அவை, 'இராசராசன் காசு' எனப்படும். பொற்காசுகளில், வாசிபடாமற் செல்லும் ஈழக்காசு என ஒன்றிருந்தது. (S. I. I. Vol. V. p. 508) ஈழம்-பொன். இஃதன்றிக் காய்ச்சி உருக்கி வெட்டி நாணயமாக்கினும், மாற்றும் நிறையும் தூய்மையும் குன்றாததென அதிகாரிகளால் ஆராய்வு செய்ததற்கு அறிகுறியாகத் துளையிடப்பெற்ற துளைப் பொன்னும் உண்டு. G. O. No. 919. Public, 29th July 1912.

இனி, இவன்காலத்தில், எண்ணல், எடுத்தல், முகத்தல் நீட்டல் என்ன நான்கு வகைப்பட்ட அளவைகளில், எடுத்தலாகிய

நிறுத்தல், மணிகளும் பொன்னும் வெள்ளியுமாகில், கழஞ்சு மஞ்சாடி குன்றி என்னும் அரச முத்திரையிட்ட குடிஞைக் கல்லாலும், செம்பு பித்தளை வெண்கலம் தரா என்பனவெனில், பலம் கைசு என்னும் நிறை கல்லாலும் நிறுக்கப்பட்டன. பொன்னின் மாற்றறியும் ஆணிக்குத் தண்டவாணி என்று பெயர்.

இனி, செம்பு பித்தளை முதலியன, "செப்புக் குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலம்" என்றாற்போல எத்துணையாயினும் பலத்தால் நிறுக்கப்பட்டனவேயன்றி, இற்றை நாளையில் வழங்கும் சேர், வீசை, துலை முதலியவற்றால் நிறுக்கப் பெறாமையின், இந் நிறுத்தற் கருவிகள் அக்காலத்தில் வழக்கில் இல்லை போலும் என்று ஊகிக்கலாம்.

இனி, சர்க்கரை, கடுகு, மிளகு, புளி என்னும் இவைகள் பலத்தால் நிறுக்கப்பட்டன. நெல், அரிசி, பயிறு, பருப்பு, உப்பு, நெய், பால், தயிர் முதலியன செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, தூணி, கலம் என்ற முகக்குங் கருவிகளால் அளக்கப்பெற்றன. அரச முத்திரையிட்ட ஊர் மரக்காலுக்கு இராசகேசரி என்று பெயர். அருண்மொழித்தேவன் எனவும் மரக்காலுக்குப் பெயர் வழங்கிற்று.

இனி, நீட்டலளவை தோரை, விரல், சாண், முழம் என்பவற்றால் நடைபெற்றது.

இனி, அரசன் திருவாய்மலர்ந்திடத் திருவாய்க் கேள்வி மாராயன் கற்றுச் சொல்லப், பட்டோலைப் பெருமான் எழுதிடத் திருமந்திர ஓலை, திருமந்திர ஓலை நாயகன் என்பார் இருவரும் கையெழுத்திட்ட பின்னர், உறுதிபெற்ற ஆணைத் திருமுகத்தை விடையிலதிகாரி ஊர்ச்சபைக்குத் தூதுவர் வாயிலாக அனுப்புவர். அதனைக் காணுமுன் அவைக்களத்தார் எழுந்து எதிர்சென்று தொழுது வாங்கித் தலைமேற்கொண்டு மேம்படுத்துவர். இதனை, "ஸ்ரீகோவிராஜராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்றாவது நாட்டொழுக்குத் திருமுகம்வர நாந்தொழுந் திருமுகங்கண்டு எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித் தலை

மேல் வைத்துப் பிடிசூழ்ந்து பிடாகை நடந்து எல்லை தெரித்துக் கல்லும்கள்ளியும் நட்டு அறவேலை செய்த நிலத்துக்கு" என்று ஆனைமங்கலச் சாசனத்தா லறிக.

இனி "சேற்றூர்க் கூற்றத்து பிரமதேயம் நாலூர் பட்டப் பெருமக்க ளுள்ளிட்ட பெருங்குறிப் பெருமக்களேம் எங்களூர் திருமயானத்து ஸ்ரீ மூலஸ்தானத்து மஹாதேவர்க்கு நாங்கள் விற்றுக் குடுத்த எங்களூர்க் கடைத்தெருவில் அங்காடிக் கூலி யாவது" "புறவூர் நின்று நெல்லும் அரிசியும் மற்றும் கிடந்து விற்பன குவாலால் நாழிகொள்ளப் பெறுவதாகவும், நிறுப்பன நிறையால் ஒரு பலம் கொள்ளப் பெறுவதாகவும், வெற்றிலைக் கூடையால் ஒரோ பற்றும், பாக்குக் கூடையால் இரண்டு பாக்கும் கொள்ளப் பெறுவதாகவும்" என்பவற்றால், பிறவூரினின்றுங் கொடுபோந்து தம்மூர்க் கடைத்தெருவில் விற்ற பொருட்குப் பெருமக்கள் அங்காடிக்கூலி ஏற்படுத்தவாறறிக. பெருங்குறி—பேரவை.

இனி, "கோவிராஜராஜ ராஜகேஸரி வன்மர்க்கு யாண்டு கஎ ஆவது காலியூர்க் கோட்டத்து தன் கூற்று சிவ சூளாமணி மங்கலமாகிய ஸ்ரீ விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்து இவ்வாட்டை தன்மவாரியப் பெருமக்கள் உள்ளிட்ட மஹா சபையோம்............பணித்த எழுத்து............இவ்வூரில் வெற்றிலை விற்பார் பிடாரி கோவிலன்றி விற்றாரை. ஏரிவாரியப் பெருமக்களே ஏரிக்கு முதலாக கழஞ்சுபொன் தண்டலு கொள்ளப் பெறுவாராகவும் இப்பரிசு பணித்தோம் மஹாஸபையோம்" என்ற சாசனப் பகுதியால், எந்தப் பொருளையும் குறித்த இடத்தன்றி வேறிடத்து விற்பார்க்குத் தண்டம் விதிக்கும் வழக்குண்மை காண்க.

இனி, ஊர்ச் சபையார் தாம் அவைகூடுதற்குரிய நாளைக் காளம் ஊதுவித்து உறுப்பினர்க்கு உணர்த்திவந்தனர் என்பதும், இன்றியமையாதாயின் பகற்காலத்தன்றி இராக்காலத்தும் சபை கூடிக் காரியங்களை நடத்தினர் என்பதும் இராசராசனது பதினொரும் யாண்டுச் சாசனத்துக் காணலாம்.

இனி, ஒய்மாநாட்டைச் சார்ந்த பட்டின நாட்டுப் பட்டினத்தில், பூமீச்சுரர் ஆலயத்திற்குச் செலவு திட்டம் ஏற்படவில்லை என அக்கோயில் தேவகன்மிகள் அறிவித்துக்கொண்டதின்மேல், தேவகன்மிகளையும் தேவதான நிலத்தை வேளாண்மை செய்வோரையும் வரவழைத்து, நிலத்தில் விளைவு இத்துணை என்று தெரிந்துணர்ந்து, அதற்கேற்ப அக்கோயிலுக்குச் செலவு திட்டம் அமைத்தனர், அரசூருடையான் ஆரூரன் உதயதிவாகரன் அருண்மொழி மூவேந்த வேளார் என் இராசராசனது பதினேழாம் யாண்டுச் சாசனத்தால் அறியக்கிடத்தலின், இராசராசன் காலத்தில் தேவதான நிலங்களும் கோவிலுக் கமைத்த நிபந்தங்களும் எத்தகைய நிலையில் இருக்கின்றன என்று நாட்டைச் சுற்றிப் பார்த்து ஆராய்வதற்கு மதுராந்தகன் கண்டராதித்தனர், திருவடிகள் சாத்தனர், அருண்மொழி மூவேந்த வேளாரை யுள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அரசாங்க அதிகாரிகள் பலர் இருந்தமை நன்குணரலாம். G. O. No. 1003, Home (Education), 16th August 1919, para 15 and 16.

இனி, அதிகாரிகளே யல்லாமல் அரசனும் நாடுகளைச் சுற்றிப் பார்த்து ஆராய்வு செய்வதுண்டு என்பதை, இராசராசன் இருபத்தேழாம் யாண்டில் நாடுகளைச் சுற்றிக்கொண்டு திருவெறும்பூர்க்கு எழுந்தருளியபோது உடன்போந்த சிறுகுடையான் காளி ஆதித்தன் என்பவர், திருவெறும்பூர் ஆலயத்து வரவு செலவு கணக்குகளை ஆராய்ந்தமையால் அறியலாம். Ep. Collection No. 109 of Appendix B of 1914.

இனி, இராசராசனது 28 ஆம் யாண்டுச் சாசனமொன்றில், தென்னாற்காட்டில் ஜம்பை என்னும் ஊரில், தன் காதற்பாத்தையை விரும்பி நள்ளிரவில் வலிதிற்சேர முயன்ற நாவலூரான் என்பானைக் கொலைபுரிந்த ஒரு வணிகனைக் கொலை செய்யாது, அவ்வூர்த் தான்றோன்றியாழ்வார் ஆலயத்தில் விளக்கொன்று வைப்பதற்குப் பொன் கொடுக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் இவன் காலத்தன்றி ஏனையோர் காலத்தும் இவ்வழக்கே யிருந்தமை பின் வருவனவற்றுட்

காண்க. ஊரதிகாரி ஒருவன், வரி கொடுக்கக் கேட்டுத் தனக்குரிமையில்லையென மறுத்துரைத்த ஒரு பெண்ணை மிக வருத்த, அதற்காற்றது அவள் நஞ்சுண்டு மாய்ந்ததற்கும், வேட்டைமேற் சென்ருெருவன், எய்த அம்பு குறி தவறி ஒரு உழவன்மேற் பட்டதனுல் அவன் இறந்ததற்கும், ஒருவன் தன் மனைவியைத் தள்ளியதனுல் அவள் விழுந்து இறந்து பட்டதற்கும், ஒருத்தி தன் மகள்மீது எடுத்தெறிந்த கோல் பட்டுப் பக்கத்திலிருந்த சிறுமி மாண்டதற்கும், வயலில் எருமையை விடுத்தமையால் பயிர் அழிவுற்றதன் காரணமாக மாட்டுக்குடையானை அடிக்க அதனுல் அவன் இறந்தமைக்கும், கோயிலில் விளக்கு வைக்க ஏற்பாடு செய்தனரேயன்றி உயிர்போக்கிலர். இவற்ருல், தற்செயலாக நேர்ந்த சாவுக்கெல்லாம் ஏற்றபெற்றி தண்டித்ததன்றி உயிர் போக்காமை அறியப்படும்.

இனி, இவன் காலத்தில் பழைய கோயிலைப்புதுப்பிக்க விரும்புவோன், அக் கோயிற்குரிய நாட்டதிகாரியிடம் தன் எண்ணத்தைத் தெரிவிப்பன். அதனை உணர்ந்த அரசன் கட்டளை செய்யுமாறு அடியிற் காண்க.

"உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு உ௰அ ஆவது நாள் ௩௰கூ-னுல் வடகரை ராஜேந்திர சிம்மவளநாட்டு பொய்கை நாட்டு தேவதானம் திருமழுவாடி யுடையார் ஸ்ரீ விமானம் வாங்கி திருக்கற்றளி யெடுக்கவென்று உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் அருளிச்செய திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி இஸ்ரீ விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்க வென்று அதிகாரிகள் இருமுடி சோழ மூவேந்த வேளார் நியோகமும் மும்முடிச்சோழ பிரம்மாதி ராயர் நியோகமும் ஸ்ரீ கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்து சபையார்க்கும் ஊராள்கின்ற சிறுதனத்துப் பணிமகன் ஆலங்குடையான் அமலன் னுத்தம சோழனுக்கும் ஓலைவர" எனவும், "ஆக இவ்வனைவர் கண் காணியாலும் இவ்வனைவர் கணக்கினுலும் கல் வெட்டுவித்தபடி முன்பு கல்வெட்டுச் சேர்த்த பொத்தகப்படி" எனவும் வந்துள்ள சாசனங்களால் (Vol. 5, p 275) திருமந்திர ஓலைநாயகர் அரசன் அருளிப் பாட்டினைத் தம் கைபெழுத்திட்டுத் திருமுகத்தினைத்

தூதுவர் வாயிலாக ஊர்ச்சபைக்கும் ஊரதிகாரிக்கும் விடுப்ப, அவர்கள் திருப்பணி செய்வோர் விமானம் வாங்குமுன், அதன் கண் உள்ள சாசனங்களை அவர்களைக்கொண்டு ஓலையில் எடுத்தெழுதுவித்து, விமானம் வாங்கிக் கட்டி முடிந்த பின்னர், பலர் கண்காணிப்பின்பேரில், தாம் காட்டும் இடத்தில் அவற்றை மீளவும் வெட்டுவிக்கும் வழக்குண்மை தெரியலாம்.

இதுகாறும் கூறியவாற்றல் இவன் எல்லாக் காரியங்களையும் தானே நடத்தற்குரியனெனினும் உடன்கூட்டத் ததிகாரிகள் பலருடன் சூழ்ந்தே காரியம் நடத்தினன். அமைச்சர், வழக்காராய்ந்து முறை செய்வோர், அரச காரியத்தை மேற்கொள்வோர், நாட்டை வகை செய்வோர், அதனைக் கண்காணிப்போர், கோயிலுக் குரியவற்றை ஆராயும் பொறுப்பமைந்த அதிகாரிகள், விடையிலதிகாரி, பட்டோலைப் பெருமான், வரியிலார், வரிக்குக் கூறு செய்வோர், பாடி காப்போர் முதலியோரும் இருந்தனர். நீதி மன்றம், ஆவணக்களரி, புரவுவரித் திணைக்களம் எனும் இவை இருந்தன. பொற்காசும் செப்புக்காசும் வழங்கின. எடுத்தல், முகத்தல்கட்குரிய எடைக்கல்லினும், மாக்காலினும் இராசகேசரி என அரச முத்திரை இடப்பட்டன. இராச்சிய முழுமையும் மிக நுட்பமாக அளந்து எல்லை தெரித்துப் புள்ளடிக்கல் நட்டுக் காணிக்கடன் ஏற்படுத்தப்பட்டது. அரசிறை நெல்லும் பொன்னும் கொண்டனர். இராச்சியம் மண்டலங்களாகவும், மண்டலம் பல வளநாடுகளாகவும், வளநாடுகள், நாடு, நகரம், ஊர்களாகவும், பகுக்கப்பட்டிருந்தன. ஊர்தோறும் சபையிருந்தது. சபைக்காக ஒவ்வொரு யாண்டினும் பொது மக்கள் பொது மாளிகையில் கூட்டம் குறைவறக் கூடிக் குடவோலை வாயிலாகக் காரிய நிறைவேற்றுக் கழக உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பர். அவ்வாறு தேர்ந்திடப்பெற்ற உறுப்பினர் ஊரின்கண் நன்மை தீமைகளை நாடிக், குற்றங்காணின் ஏற்ற பெற்றி தண்டித்தலும், நிலங்களைக் கண்காணித்தலும், இறை கொடாதவர் நிலத்தைப் பறிமுதல் செய்து ஊர்ப்பொதுவாக்கி விற்று அரசிறை செலுத்தலும், ஏரி, குளம், யாறு முதலிய நீர் நிலைகளைப் பேணுதலும், விளைவுக்கு வேண்டிய நீரை அளவறிந்து பாய்ச்சலும், அதற்கு வரி இறுத்த

லும், பிற ஊர்களினின்றும் கொடுபோந்து தம்மூர்க் கடைத்தெருவில் பல்வகைப் பண்டமும் விற்பாரிடை அங்காடிக்கூலி கோடலும், குறித்த விடத்தன்றிப் பிறவிடத்துப் பண்டம் விற்பார்க்குத் தண்டம் விதித்தலும் செய்து வந்தனர். அதிகாரிகளேயன்றி அரசனும் நகர பரிசோதனை காரணமாக நாட்டைச் சுற்றிப் பார்க்கும் வழக்குண்டு என்பனவும் பிறவும் நன்கறியலாம்.

உ

# குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

இப்பிள்ளைத்தமிழ் சரித ஆராய்ச்சிக்கு இன்றியமையாத குறிப்புக்களும், சொற்பொலிவும், பொருட்பொலிவும் பெற்றுச் சிறந்து விளங்குவது. இதனை இயற்றியவர் ஒட்டக்கூத்தராவார். இப் பிள்ளைத்தமிழ் பெற்றோன், சோழர் மாபிற் காணப்படும் குலோத்துங்கன் என்னும் பெயருடையார் மூவருள் யார் என்று ஆராயுமிடத்து, "பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி கவிச் சக்ரவர்த்தி பரவச்-செஞ்சே வகஞ்செய்த சோழன் திருப்பெயா செங்கீரை யாடியருளே" எனவும், "கோமன்னன் புவனதான் விக்கிரமசோழன் குலமதலை குலோத்துங்க சோழனைக் காத்தளிக்க" எனவும், இந்நூற் செங்கீரைப் பருவத்தும் காப்புப்பருவத்தும் முறையே வந்தவாற்றானே, கலிங்கத்துப்பரணிபெற்ற பெருமானாகிய அபயன் பேரனும், விக்கிரமசோழன் மகனுமாகிய இரண்டாங்குலோத்துங்கன் என்றறியலாம்.

இவன் இப் பிள்ளைத்தமிழ் மாலையையன்றிக் கூத்தர்பால் உலாவும் பெற்றவன் என்பது

" கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலா
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றானும் "

எனச் சங்கரசோழ னுலாவில் வருதலால் தெளியப்படும்.

இன்னும்,

" சிற்றம்பலமுந் திருந்துபே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய
மாளிகையும் பீடிகையு மண்டபமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பனைத்து
முன்னர்க் கடலகத்தின் மூழ்குவித்த—சென்னி "

என இராசராசன் உலாக் கூறியவாற்றால் இவன் சிவனடிக்கண் பேரன்புடையோன், சிற்றம்பலம் பேரம்பலம் திருக்காமக்கோட்டம் முதலிய கோயிற்றிருப்பணிகள் பல இயற்றுவித்த சீரியோன் என்பது விளங்கும்.

சேக்கிழாரைக்கொண்டு பெரிய புராணம் பாடச்செய்தவனும், கம்பரை ஆதரித்தவனும் இவனே. இவன் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமாகும்.

இப் பிள்ளைத்தமிழ் ஏடு, இடந்தொறும் சிதைவும் பிறழ்ச்சியுங்கொண்டிருத்தலின் வேறு சில ஏடுகள் பெற்றுச் செப்பஞ் செய்து வெளியிட இதுகாறும் பொறுத்திருந்தேன்; ஒன்றேனும் கிடைத்திலது. உள்ள ஏடும் செல்லுக் குணவாயொழிகின்றமையின், இதனை உள்ளவாறு வெளியிடல் நலமெனத் துணிந்து பதிக்கத் தொடங்கினேன். ஆகவே ஏடுடைய பெரியோர்கள் அன்புகூர்ந்தனுப்பி யுதவ வேண்டுகின்றேன்.

---

## காப்புப் பருவம்.

பொங்கு புரத்திரை யம்லெவந் தழலிற் புக......
......மிருகபதி பொடிபட விடறியதும்
டைங்கத விக்கனி மென்பல விற்சுளை யன்பொடளிப்பவர்தம்
படுதுயர் பொடிபட.....................................விழுந்
திங்கள் வெருக்கொள வைந்தலை வெக்கைகள் சிந்துப ணிக்கரசன்
றிருமணி முடியடி படுமுழு திரைதிசை திசைதொறு முதிரவிழுங்
கங்கை குதித்திடு கண்களி யம்படர் செஞ்சடை யப்பர்தருங்
கடதட முகபட கடகரி முகமுள கணபதி கழலிணையே. (௧)

பூமன்னு பொழிலேழுங் கடலேழுங் கடவுட்
பொருப்பேழு நிலவுமது ரைக்கும்புகார் நகர்க்குங்
கோமன்னன் புவனதரன் விக்கிரமசோழன்
தலைமதலை குலோத்துங்க சோழனைக்காத் தளிக்க
தேமன்னு தாமரையாள் மகிழ்ந்திருக்கு மார்பிற்
றிருமாலு நான்முகனு மிருமருங்குஞ் சிறந்து
மாமன்னு மணிவரையும் பொன்வரையுங் கிளைத்த
மாணிக்க வரையனைய வானடைகற் பகமே. (௨)

இடைவி டாப்பொழிகலெழிலிசாத்தவ னிளையகோற் றொடிசே
...குலோத்தமன் மகன்வ ரோத்தம னெதிரிலாப் பெருமாள்
படியி னுற்கவி பயில வாய்ப்பவர் பரசுபா த்திபன்
பதும வீட்டுறை பரம னுற்பெது பரசு காப்பவராம்
வடுவில் காப்பிய மதுர வாய்ப்பொருண் மரபு வீட்டியதால்
வழுதி யாட்சியை வளவன் மாற்...மதுரை கூப்பிடுநா
ளடைவு கோத்தன வமுத சூத்திர மறுபதாய்ச் சமைநூ
லமரர் கீழ்ப்பட வறிஞர் மேற்பட வருளு மூர்த்திகளே. (௩)

வெறிக்குங் குமத்தோள் விசயா பரண னபயனுபய குலதீபன்
விபுதர் வெருவு போர்க்களத்தில் வேழப்பொருப்பு களின்மருப்புத்
தறிக்குஞ் சுடர்வாள்......மல னதுலன் சயவிக் கிரமசோழ
சத்தாபரண நகரீ சனைக்காத் தளிக்கச் சனகாதிகள் ஞானப்
பொறிக்குந் தெரியாச் செந்தா மரையும் வெண்டாமரையும் பப்பா திப்
பொற்றாமரையுங் கடவுள்வெள்ளி நற்றாமரையு மாகப்போந்
தெறிக்குந் தனதுசெஞ்சோதி தன்றேவிவெண்சோ தியுங்கொள்ள
விருபோ தகதது மொருபோ தகலா தெல்லா யுகத்து மிருப்பாரே.

உதியர் மைந்தருஞ் செழியர் மக்களுஞ் சிங்களேசர்தம் புதல்வரு
முதகை கூடலூ ரனுரையென்றுதம்பாடிவீடுவிட்டோடிவீழவே
யதிகரங்கமுங் கொங்கரங்கமு மடையவெந்தெழப் படையெழு
மதுலனெங்கள்கோ னரசர்கோமக னபயனைப்புரந் தருளுமாற்
கதியமைந்தபைங் குரநிலத்திடா கொண்டகால்விடா நுகமெடா
கண்ணிமைப்புரு வுளையுதிர்ப்புரு கட்டிவிட்டதா ரசைவுரு
பொதியவிழ்ந்தமந் தாரநாலரு விவைதுரங்கவோ வியமெனப்
புவியுமும்பரும் புகழுமேழ்பெரும் புரவிபெற்றதே ரிரவியே. (ரு)

சாலைப்போர் வடகொப்பத் தெடுத்தபோ ரென்னத்
தனிக்கடந்தான் றிருப்புதல்வி தருணமட மாது
சேலைப்போர் கடந்தவிழித் திருபுவன முடையா
டிருமகற்கு மகனெங்கள் செம்பியனைக் காக்க
காலைப்போய் மதுகரங்கள் கிளைத்தும்பை திளைத்துக்
கடும்பகற்போ யிருகரடக் கடக்கலுழி கவர்ந்து
மாலைப்போய் மதிக்கதிர்கா லமுதெடுத்து மடுத்து
வைகறைபோய்க் கொன்றைபுகு மணிமுடிவா ரணமே. (சு)

நாவலந் தீவுமுத லேழ்பெருந் தீவுடைய
நாதனெங் கோனபயன் ஞானகெம் பீரனிசை
காவலன் கோடிபல காலமுஞ் சூழ்திகிரி
காவல்கொண் டாளவொரு காதல்கொண் டாளுவன
தூவலம் போரருவில் வேல்கடம் பாரமதி
தூரசிந் தூரகிரி தோகைகொம் பியானைகுழல்
சேவலங் கோழியிவை யாவையுந் தேவிபெறு
சீதனம் போலுடைய சேவகன் சேவடியே. (எ)

மைத்தடங்கண் மேலேந்து மாமதிக் கீற்றினள்
வைத்தகங்கை நீர்தேங்கு வார்சடைக் காட்டினன்
வட்டவெஞ் சுருநான்ற வார்குழைத் தாக்கினள்
மற்றசைத்து நேர்தாழ்ந்த மூவிலைக் கூற்றினள்
பைத்தடங் குலாக்காய்ந்த மாசுணக் காப்பினள்
பத்திகொண்டு கீழ்தாழ்ந்த பீதகக் கோக்கையள்
பச்சையந் தூழாய்வேய்ந்த வாசிகைக் சூட்டினள்
பக்கநின்று தானேந்து கோளரிப் போத்தினள்

முத்தொடுங்கு சூல்வீங்கு வால்வளைத் தோட்டினள்
முத்தெறிந்த போதேங்கு மீதெழக் கூப்பிட
முற்புகும் புகார்நீங்கு நீள்புனற் கோட்டக
முட்டமண்டி மேல்வீழ்ந்த சூழ்சிறைப் பார்ப்பொடு
கொத்தடங்கு மீன்மேய்ந்து கானலிற் போய்ச்சில
குக்குடங்கள் வாயோர்ந்து பாசடைக் காட்டொளி
கொட்பவிண்டு தாதேய்ந்து தாமரைக் கூட்டுறை
கொற்கை யெங்கள் ராசேந்திர சோழனைக் காக்கவே (அ)

பொலன்முக டுடைய நீட்டியநீலக் காற்குயில்
புரமறவறிது கோட்டிய சாபக் கோற்றொடி
பொதியவிழ் முளரி மேற்புரியோகப் பார்ப்பனி
பொழிமத வருவி தூக்கியவேழப் போர்ப்பிடி
யிலவித ழனைய சூட்டெறிகோழிச் சூர்ப்பகை
யிதழியின் முருகு தேக்கியவாசத் தார்க்கிளி
யிருநில மதனை யீட்டெழுமேனக் கோட்டுழை
யெனவிவ ரெழுவர் போற்றரியாரைப் போற்றுது
முலகறி செறிது ழாய்ப்பெருவாசச் சூட்டனை
யுமிழ்திரை பெருகு பாற்கடலோதச் சேர்ப்பனை
யுறுபகை முதலை வாய்ப்படும் யானைக் காத்தனை
யொருவிசை செவிலி சாத்தியபூதிக் காப்பனை
யலம்வரு குரவை யாய்ச்சியர்சேரித் தூர்த்தனை
யரவொடு பொருது தோற்றியகோலக் கூத்தனை
யழ்கியகுருகு லோத்தனைத் தேரிற் கூட்டனை
யபயனை யெதிரி லாப்பெருமானைக் காக்கவே. (கூ)

பாறிரட்டித்த வெருவைமீதிட்ட பந்தரிற்சிந்துராசனும்
பழையசாளுக்க மக்களும்பட்ட படுகளங்கண்டு பண்டையிற்
றாறிரட்டித்த வேழ்கலிங்கத்த ரோடிடச்செற்ற சென்னிசேய்
சோழகம்பீர னைப்புரப்பார்க டுரகமேலெழுஞ் சூழ்நுகத்
தாறிரட்டித்த தேரில்வேறொன்றே டைந்திரட்டித்த விடையிலே
கரியவேதத்தி லாயுள்வேதத்தி லளிசுலம்பாட வடிவிழுஞ்
சேறிரட்டித்த கடதடப்பத்தி யெட்டிரட்டித்த யானையிற்
றிகழுமார்வத்த ராகிநிற்கின்ற தேவர்முப்பத்து மூவரே. (ய)

அறிந்தசிங்கள ரனந்தருஞ்சுர ரனேகரும் பழையதென்னரோ
ரைவரும்பொருது செம்பொன்மாரியி லனைத்துவாயிலினு
[மன்றுபோய்
முறிந்தஞாயிலென முன்கிடந்தற முனிந்தசென்னிமகன்
[மன்னர்கோன்
முரிவாளபய னெங்கள்செம்பொன்முகி லைப்புரக்க வடி
[விட்டவிழ்
செறிந்தமேருசிக ரத்தொழுங்குதக ரப்புரண்டதொரு குன்றமுஞ்
சென்றதானவ னுடம்புமப்படி நிமிர்ந்திறக்கவொரு
[செங்கைவே
லெறிந்த தன்னுடைய தன்னைதன்னொடு புரத்திரையமட
(தமப்பண)
ரெய்தநாளமர் செய்தபோரணியில் யானையேறிவரும்
[யாளியே (கக)

வருகரு நாடருக்கூரின் மறுகினர் கபடமுட்காறு
மலைபட வெறிவளைப்பேறு மதவரை யதனெழப்போ
வருமுனை வினைவிளைத்தாடு மவன்மகன் மகன்முதற்போ
னபயனை யினிதளிப்பாளு மகிலமு மிடர்கெடுப்பாளு
மிருபிறை வளையெயிற்றாளு மிளவளை யணிகரத்தாளு
மிருகுழை பிறழ்புறத்தாளு லெழிலொளி........
வொருவிழி வெயிலெறித்தாளு மொருவிழி நிலவெறித்தாளு
மொருவிழி யழலெரித்தாளு மொருபுடையிருளெரிப்பாளே.

காப்புப் பருவம் முற்றும்.

தொடரும்.

உ

# தன்னலமும் பொதுநலமும்.

## (ஓர் இனிய உரையாட்டு.)

திரு. அ. வரதநஞ்சையபிள்ளை யவர்கள், தமிழ்ப்புலவர்,
சலகண்டபுரம்.

பொதுநலம் :—ஐய! வருக! வணங்குகின்றேன்.

தன்னலம் :—எம்மை இன்னாரென அறியாமுன் முகமன் கூறி யழைக்கின்றனை. உன்னை இதன்முன் எங்கேனும் பார்த்ததாக எமக்கு நினைவில்லையே.

பொது :—யானும் தங்களை இதுகாறும் அறியேன். இப்போது தெரிந்துகொள்வதற்காகவே அழைக்க முற்பட்டேன்.

தன் :—நன்று. நீ யாவன்? எங்குள்ளாய்?

பொது :—பெரியீர்! அடிமையின் பெயர் 'பொதுநலம்' எனப் புகல்வார்கள். என்னிருப்பு இப்பக்கத்திற் சிற்சில இடங்களில்.

தன் :—ஓ! அறிகின்றேன். இப்பெயரை நமது பிறவிப் பகைஞர் பலர்கூறக் கேட்டிருக்கிறேன். நீ தானோ? நன்று நன்று. அப்படியாயின், நீயும் நாமும் வயிற்றெரிச்சல் பொங்கும் பெரும் நட்பாளராகின்றோம்.

பொது :—தங்கள் திருப்பெயர் கேட்க விரும்புகின்றேன்.

தன் :—இவ்வுலகிற் பலரும் அறிந்து புகழ்ந்து பாராட்டும் பெருமை மிக்க எமது பெயரை அறியாதார், என்றும் ஒன்றும் அறியாதாரேயாவர். 'தன்னலம்' என்று கேள்விப்பட்டிவீரோ?

பொது :—ஓ! ஓ! அவ்வல்லரக்கர் தாங்கள்தாமோ? முதலிற் பார்த்தபோதே அப்படித்தான் ஊகித்தேன். எங்கே அருமையாகத் தன்னந்தனியே புறப்பட்டீர்கள்?

தன் :—அட! வெட்கமேயில்லாத இம்மடமையோடு வீணுக வார்த்தை வளர்கின்றது. நமது ஓய்வொழிவில்லாத வேலைகளுக்காக அல்லும்பகலும் எங்கும் சுற்றிக்கொண்டு விரைந்து செல்ல வேண்டியிருக்கு மென்பதை அறியாமல் வம்பு வளர்க்கும் பேதாய்! கேட்டி! யாம் புகாத இடம் இப்பூவுலகிலும் வானுலகினும் கீழுலகினும் எங்குண்டு? எம்மாற் றீண்டப்படாதார் கடவுளும் அவர்போன்ற மிகச்சில மனிதர்களுமே. ஒன்றைமட்டும் நினைவிற்கொள். எம்பேச்சுகளில் 'நாம், நமது' என அடிக்கடி வருஞ் சொற்கள் உயர்வு கருதிய தனித்தன்மைப் பன்மைகளாக இருக்குமேயன்றி, முன்னிலை, படர்க்கை உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாக விரா. இதனை எப்போதும் நினதுளத்தில் பதித்துக் கொள். ஒருக்கால், உன்னையும் எம்மோடு கூட்டிப் பேசுவதாக நீ கனுக்காணும விருப்பதற்கென்றே அழுத்தமாக வற்புறுத்துகின்றோம்.

பொது :—(நகைத்து) தமது கட்டளைப்படியே ஆகுக. தாங்கள் இனிதமர்ந்து விளையாடும் ஆட்டிடங்கள், திருவுலாக்கொள்ளும் கூடங்கள், நிலைத்து வாழும் அரண்மனைகள் இவை இவை எனத் தயைகூர்ந்து தெரிவிக்கக்கூடுமோ ?

தன் :—என்ன! நீ ஓர் பித்தனேகொல்! முற்கூறியதை மறந்தனை! பேதாய்! உருவமேயில்லாக் கடவுளும், அவர் படைப்பில் உள்ளத் திட்பமற்ற ஒருசிலரும் ஒழிய, யாவரும் எம்மையறிவர். நாமும் அவரை நன்கறிவேம். விரித்தல்வேண்டின் மிக நீளும். சுருங்கக் கூறின் நினக்கு விளங்காது. ஆதலின் ஓராற்ருல் தொகுத்துச் சுட்டுதும்; கேட்பாய் எம்பெருமையை. உலகாள முடிபுனைந்த உயர்மன்னர் உள்ளத்தும்; படைவீரர் போர்முனையிற் படுகளத்தும்; கற்றுணர்ந்த புலவர்பலர் கவிசொல்லும் நாநுனியிலும், அவர்தம் எழுதுகோல் நுனியினும்; அழகமைந்த பொருட்பெண்டிர் அன்பார்ந்த மொழிகளினும்; பெரும் பணம் திரட்டிக் குவித்த ஊக்கத்தினர் ஊக்கத்தினும்; கணவரோடு கூடாதூடிப் பொய்புறக்க முறங்கும் இளமங்கையரின் தூக்கத்தும், நீதிமன்றமேறிச் சட்டமுறைபேசும் வழக்கறிஞர் (வக்கீல்கள்) சிலர் எண்ணத்திலும், பேச்சுத் திறமையிலும்; போர்க்கஞ்சிப்

புறங்காட்டி ஓடும் வீரர்களின் ஓட்டக்கால்களிலும்; பண்டம் பலபகரும் வணிகமாக்களின் முகத்தல் எடுத்தல் நிறுத்தல் முதலிய அளவுகருகளின் முகப்புமுனைகளிலும்; தம்மையே உயர்குலத் தினரென்றெண்ணி எற்ற ஒழுக்கமில்லா திருமாந்து பிறரை மனிதரெனவே மதியாது புறக்கணிக்கும் சீரியோரின் முழு உடலி லும், சாயலிலும், அவர் வாழும் மனை, வீதி, தெருத்திண்ணை முத லிய எல்லாவிடங்களிலும்; கைக்கோலாலோ கடுத்த பார்வை யாலோ இலவசமாக வேலைவாங்கும் ஆண்டைமார்களின் உங்கா ரக்குரலிலும்; தங்கள் காரிய நிறைவேற்றத்துக்காகக் கண்ணோட்ட முடையார்போல நடிக்கும் அறிவாளிகளின் நடிப்பிலும், துள்ளும் துடிப்பிலும், நொடிப்பிலும்; இல்லையென்றிரக்கும் ஏழைகள் சொல்லைத் தாமும் திருப்பிச் சொல்லும் வள்ளல்களின் பல்லொளி யிலும், சொல்லொலியிலும் கும்பிட்ட கையை விரித்து எந்தும் நட்பாளரின் விரல் வரிசையிலும்; அரசியலிற் பெரியபதம்பெற்று உயர்ந்த பொருள்பெறும் கூர்த்தமதியினர் தம் கீழ்வேலைக்காரர் களைச் சினக்கும் அழகிய முகத்திலும், அவர்களை ஒறுக்கும் கருணை மிக்க உள்ளத்தூடும்; யாங்கள் உயர்மெய்ச்சமயத்தேம், எமது முன்னோர்கள் அறங்கடவா நன்னெறியாளர்கள், பெரியபொரு ளாளர்கள் எனத் தம்மைப் புகழும் வாய்மையாளரின் நெஞ்சத் துடிப்பிலும்; அன்றி, சின்னாட்குள் சிதைந்தழிந்துபோகும் வண்ண வண்ணப்பொருட்களை இந்நாட்டிற்கனுப்பி ஈண்டுக் கைத்தொழில் பெருகாதுகொன்று, கொள்ளைப்பொருட்களைக் கொள்ளைகொண் டுறிஞ்சும் மேனாட்டுத் திருவுடையாரின் செந்நீரிலே, (இரத்தம்) அவர்தம் அகட்டிலே, பகட்டும் பகட்டிலே; பொதுநல வுரிமை பூண வந்தேம், எம்மைத் தேர்ந்தெடுமின் எனப் பற்காட்டிக் கெஞ்சிக் கைவிரித்துக் கால்பிடித்து நம்மூர்க்கும் நமக்கும் வேண்டும் உதவியை மறவாது செய்வேம் என இக்காலத் தூர் தோறும் உலாவும் சீமான்களின் நோக்கத்திலே, இன்னுரையிலே, புன்னகையிலே; தமது சொல்லுரிமையாற் றேர்ந்தெடுத்தற்குக் கைம்மாறு நோக்கும் குடிகளின் கட்கடையிலே, உட்கடையிலே; கண்மூடித் தலைநிமிர்ந்து கைவடம்பற்றி உருவெண்ணும் கடவுட் கன்பர் கருத்தகத்தே, அவர்கள் வழிபாட்டின் தொடக்கத்தே, இறுதியிலே; குழலும்யாழும் தொட்டிசை காட்டுவோரின் இசைப்

பண்ணிலே; அதனைக்கேட்டு நன்குணர்ந்தார்போல உணர்ந்தாரைப் பார்த்துத் தலையசைப்பவர்களின் கழுத்து நரம்பிலே; உடல் பொருள் ஆவி மூன்றுந் தருகின்றேம் எமக்குப் பிறவி தாராதே எனக் கடவுளை வேண்டும் அடியவர் வடிக்கும் கண்ணீரிலே, எண்ணந்தோன்றும் இடத்திலே, அவர்கள் உச்சியிற்குவித்த கைக்குள்ளே; மற்றும் புறந்திண்ணையிடா தமைத்த எழுநிலை மாடங்களிலே; பணம் பெருகுந்தோறும் அவாமேலிட்டு, உடாதுமுண்ணாதும் தம்முடம்பு செற்றும், ஈட்டம் இவறி இசைவேண்டாதும் பேய்போர்வலையும் நல்லோர்களின் நாடி, நரம்பு, எண்ணம், சொல், செய்கை முழுதுமாகிய அகத்திலே, புறத்திலே எனுமிவ்விடங்களிலும் பற்பல அணுவாகி நிறைந்துள்ளேம். மனிதர் மட்டுமா? ஏனை விலங்கு, புள், மரம், புல் முதலாய்த் தாழ்ந்த அறிவுடைய எவையும், யாங்கொலுவீற்றிருக்கும் கூடமே என உணருதி. உயிரெனப்படும் எவையும் எம்மா லியக்கப்படுகின்றனவே. மூச்சற்றேரொருவன் பிழைத்தலும் கூடும்: யாம் கைவிடின் அந்தோ! ஒருவரும் உய்யவே முடியாது. பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப் பரிவுடையார் கடவுளென்பர்: அக்கடவுளினு மேம்பட்ட கருணையாளர் ஒருவரைக் காட்டல் வேண்டின் அறிஞர் எம்மையே சுட்டுவர். நெடும்போது நின்னுல் வீணாயிற்று. தம்மைப் புகழ்தல் தகாதென்னினும் அது புலவர்க்காகும் என்று கூறி யிருத்தல் போலவே நமக்கும் அஃதேற்புடையதேயாம். நின்பெருமைகள் யாதேனும் கூற விரும்புவையேல் கூளறுக. நம் மாட்சிக்கு முன் அஃதெத்துணைச் சிறுமையுடைத்தென வுலகமறியட்டும்.

பொது:—(நாணமுற்று) தங்கள் அளவிலாப் பெருமை நிறைவுறும்பொருட்டு என் சிறுமை எதிர்பார்க்கப்படுமானுல் அதனுற் போந்த பயன் யாது? பயன் கருதாது ஒன்று செய்வது தங்கள் பிறவியியல்பன்றே. ஆகவே, என் தோல்வி காண்பதுவே தங்கள் கருத்தெனெ விளங்குகின்றது. நும்மைப்போல் பல ஏடுகளை நிரப்பும் பேச்சு வளர்ப்பு வேண்டேன். தாங்கள் எனக்குள் ஓரணுவாய் அடங்குகின்றீர். யான் உமக்குள் அடங்கிற்றிலேன். இதுவே பிறர், பெருமையெனப் பாராட்டும் எனது சிறுமை.

தன்:—(அடங்காச்சினத்தோடு தீப்பறக்கவிழித்து) பயலே! நீயா எம்மை அடக்குபவன்? நன்று! உன் பேச்சை உறுதிப் படுத்தின லன்றி நின்னை அடிபெயர்க்கவொட்டேன். வந்தது வாது, சும்மா போகாது. உனக்கே தரும் தீது!

பொது:—பொறுமையே உருவாம் புண்ணியரே! சினங் கொள்ளாது கேட்டால் உண்மை யுணர்வீர். யாவர், பிறர் படும் துன்பம் பொறுது பரிவுகூர்ந்த நெஞ்சினராய்த் தங்களை (தன்னலத்தை)க் கைசோர விட்டு நாட்டுத் தொண்டியற்ற முற்படுகின்றார்களோ, அவர்களை எல்லா வுலகமும் கைகூப்பித் தொழுது, என்புநெக்குருகும் அன்போடெதிர்ந்து, நன்றி பாராட்டி, நன்குமதித்து, போற்றி, அவர்கள் கால்பட்டது தம் கண்ணிற்பட்டதாக ஒழுகி, விரைந்து தொழில் கேட்கும் (கூலி விரும்பா) வேலை யாட்களாகப் பணிசெய்யக் காண்டலின், என்னை (பொதுநலத்தை) எய்தினோர், தமது நன்மைக்கேய்ந்தவற்றைப் பலரும் அன்புகூர்ந்து செய்யும் நன்னிலைமையி னுயர்ந்து, திசை தொறும் சென்று நிவக்கும் நல்லிசை பூண்டு, உலகத்தே உருக்கொண்டு வந்த கடவுளேபோல வாழ்ந்து, மறுமைக்கட் பெறும் பயனும், இறைவன் திருவருளும் எளிதின் அடைவார்க ளாதலின், என்னுள் நீர் அடங்குகின்றீர் என்றேன். இனி, எப்போதும் தமது நன்மையிலேயே கருத்துடைய நும்மவர் பிறர் மதிப்புக்கு இலக்காகாது, இழிதகவினர், வண்கண்ணர், வஞ்சகர் என யாவரும் இழித்தொதுக்கி வெறுக்கப்படுகின்ற துண்மையாதலானே உம்முள் யான் அடங்கிற்றிலேன் என் கிறேன்.

தன்:—என்னே! ஈதொரு பெருமை! "அடக்கம் அமரரு ளுய்க்கும் அடங்காமை—யாரிரு ளுய்த்து விடும்." செல்வர்க்குப் பிறிதொரு விழுச்செல்வமாகும் பணிதல் என்பது பொய்யாத தமிழ்மறை. யார்க்கும் அடங்காப் பிடாரியாய்த் திரிவது மிகவும் எச்சன்றோ!

பொது:—வாயடியா மெய்யை வெல்லும்? கடவுள் எல்லா வற்றையும் தம்முள் அடக்கித் தாம் எவற்றிலும் அடங்கியு

மடங்காது நிற்பதறியீரோ! மேலும், எண்களில், நூறு ஆயிரத்துள் அடங்கும், ஆயிரம் நூற்றுள் அடங்காது. அடங்காமையால் ஆயிரத்தினும் நூறு பெரிதெனப்படுமோ? நீரே கூறுக.

தன்:—நீ கூறியவாறே நின்னுள் யாங் கலந்துள்ளேமன்றோ? அங்ஙனம் கலவாத விடத்து நினக்குப் பெருமையேது! ஆகவே எம்மாற் பெற்ற பெருமையை நினதாகத் திரிபுணர்ச்சியாற் பேசுகின்றனை!

பொது:—உமது பேராலன்றி எனது பேரால் நான் தங்கட்கு வலிய மிகமிக மரியாதை தருகின்றேன். பெருமை யார் கண்ணது!

தன்:—(புன்னகை பூப்ப) அதுவும் நன்று! அங்ஙனமாயின், நீ எமதடிமைபோலும்! நாளும் நமக்கு மரியாதை வழங்குதலால்.

பொது:—என் இயற்கையே அது. தாழ்ந்தோர், உயர்ந்தோர் கற்றோர், மற்றோர், செல்வர், வறிஞர், பெரியோர், சிறியோர், பெண்கள், மகவுகள், நல்லோர், அல்லோர் ஆகிய எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும், ஆருயிர்கட்கெல்லாம் அன்புசெய்ய வேண்டுவதும், நினைவுக்கு மெட்டாநிலையுடைக் கடவுளை ஊனக் கண்ணாலுணரேனாயினும் அன்னவன் வாழும் கோவில் உயிர்களே எனக்கொண்டு அவர்கட் காற்றும் திருத்தொண்டை இறைவற்குவக்கும் கைம்மாறெனக் கருதுவதும், மற்றும் பிறந்த நாட்டின் மேலும், பிறப்புரிமைக் கருந்தனமாகிய தாய்மொழி மேலும் பற்றுச்செய்து பாவக்கடன் பூணலும் என் உட்கிடை. இத்தகைய கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டனே, நும்மைப்பிற அறிஞர் பலரும் எள்ளி நகைத்தல் காணலாற்றாது நன்மதி கூறித் தெருட்டப்புக்கேன்.

தன்:—ஆம்! இஃது ஓர் தலைவனுக்கு வேண்டியவற்றை மனைவி ஈட்டித்தருதலை ஒக்கும்.

பொது:—(நகை முகத்தொடு) முன்னம் அடிமை யென்றடிகோலி என்னை மனையாட்டி என முடிவுகட்டித் தொடர வருகிறீர். அவ்வாறு கொள்ளாது, ஓர் அறிவற்ற குழவிக்கு அன்னை புரியுங்

கடப்பாடே போல்வது: அன்றி, எல்லாவுயிர்க்கும் கடவுள் மாறாது வழங்கும் அருளையே நிகர்வது எனக் கூறலாகாதோ?

தன் :—(சிடு சிடுத்து) சை! முட்டாள்! நாம் எம்மை மாத்திரமா? நமது மனைவி மக்கள் உற்றோர் பெற்றோர் உறவினர் முதலானோர்களையும் பாதுகாத்து வருகின்றோம் அல்லவோ? ஆதலின் நீயும் எம்மில் அடங்குகின்றாய் என்பதில் முரண்யாதும் இல்லையே.

பொது :—பேரறிவுடையீர்! இங்கேதான் நன்றாய் நினைவுகூர வேண்டும். எங்ஙனம் தங்கள் வீட்டினரையும் உரிமைச் சுற்றத்தாரையும் அன்புடன் பேணி உமது உழைப்பின் பெரும்பாகம் அவர்கட்குதவுகின்றீர்களோ, அதே நோக்கத்தை இன்னும் சற்று விரிவு படுத்தி நமது மக்கள் போலப் பிறர் மக்கள்; நம்மைப் போல்ப் பிறர்; நம்முடன் பிறந்தார்போற் பல குலத்தினரும்; நம்வீடே போல்வது நம் தாய் நாடு; உயிரே யனையது நம் சமயம்; நம் கண்ணே யனையது நம் தாய்மொழி; அக்கண்ணின்மணியே போல்வது நல்லொழுக்கம்; நம் கையோடொப்பது நம்பொது நலமுயற்சி; நம் காலேயன்னது பொதுமக்கட் சேவை எனத் தாராளமான எண்ணத்துடன், நம்மாலியல்வது கரவாது செய்தலே ஆண்மை; பிறர் வருந்தப்பொறுமையே நமது பொறுமை; தன்னலத்தைச் சிறுவதே நம் சினத்துக்குச் செல்சார்; யாவர் மாட்டும் அன்புசெலுத்தலே நமது தவம் என்றிங்ஙனம் நமது மனக்கோணல் நேராய் நிமிரக் குனிந்த முகம் நிமிர்த்தால் யாவர்க்கும் நன்மைபெருகும். இவ்வாற்றால் நீரே நானாக மாறவும் வழியுண்டு. யான் யான் என்று கருதலால் வரும் தங்கள் இறுமாப்பு, ஆழ்ந்து உண்மைகருதாத அறியாமையானே இடம் பெறுகின்றது. அருவருப்பாம் அணிகலன் பூண்டு, தற்பெருமையாம் தீ நாற்றந்திமிர்ந்து, தன்னலமே கருதல் என்னும் பாடை மேற்கிடந்த அழிபிணம் போன்ற மாக்கள் வாழ்வு, பூத்தலிற் பூவாமையே நன்றாம். இக் கொடுங்குணம் ஒழியத் தாங்கள் உடனே வழி தேட வேண்டும்.

தன் :—நன்றாய் விளங்கிற்று. முதலில் எம்மி (தன்னலத்தி) லிருந்தே நீ (பொதுநலம்) தோன்றுவதாகச் சொன்னாய். அற்றேல் யாம் உமக்கு ஆண்பாலில் தந்தையும், பெண்பாலில் அன்னையும்,

பால் அறியாவகையில் வித்தும், எல்லாப்பாலிலும் கலப்புற்ற வழிக் கடவுளும்போல் முதற் கருவியாகின்றேம் ; அன்றித்துணைக்கருவி யாகவும் நிற்கின்றேம். இதனால் நீ எம்மை இழித்துரையாடுவது தகாததொன்றே. இனியேனும் வாயடங்குவாயோ ?

பொது :—அப்படிச் சொல்லப்படுமோ ? நெருப்புத்தான் தோன்ற இடமளித்த விறகையே கரியாக்குவது கண்டிலீரோ ?

தன் :—ஏது ! எம்மை எளிதில்விடாது வம்பளக்கின்றனை ! முதலில் உனக்குள் நாம் அடங்கிவிட்டதாகப், பின் எம்மில் நின்றும் தோன்றுவதாக, எமக்கு வலியப்பெருமை வழங்குவதாக, முடிவில் எமக்கே உலைவைப்பதாக ஒன்றோடொன் றொவ்வாது மூரணும் பல விகட முரைக்கின்றாய். நீ நல்லவாயாடி.

பொது :—ஐயீர்! வாய்பேச்சுக்குரிய காலம் நெடுநாட்குமுன் கழிந்தது. இப்போது செய்கையினாற் காட்டுங்காலத்தை வரவேற்றிருக்கின்றோம். தன்னலத்தம்பிரானே ! தங்கள் தயவாற்றான் என்பேர் தழைக்கவேண்டும், இந்நாடும் உய்யவேண்டும். "நல்லது செய்த லாற்றீ ராயினும், அல்லது செய்த லோம்புமின் அதுதான், எல்லாருமுவப்பது அன்றியும், நல்லாற்றுப் படூஉநெறியுமா ரதுவே" என்றாங்கே உங்கள் ஆரவாரத்தைக்குறைத்துக் கொள்ள வேண்டுகின்றேனேயன்றி உம்மால் இயலாத—ஆற்றலுக்கு மீறிய—ஒன்றை வருந்திச்செய்து தா வலித்தேனல்லேன். நீர் மக்களுள்ளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பின்னிடைகின்றீரோ அவ்வளவுக் கவ்வளவு பொதுமக்கட்கு உதவியும், செய்வோர்க்குப் புகழும், நாட்டுக்கு நன்மையும், காண்போர்க்குப் பெருமையும் விளையும். உமது ஆக்கம் பெருக ஊழல் நாற்றம் பெருகி நாட்டைக் குட்டிச் சுவராக்கிவிட்டது. தயவு புரிந்து வேறிடம் யாதேனும் விரைவில் பார்த்துக்கொண்டு எழும்பினால் நலம்.

தன் :—வெகு பேச்சுக்காரன் விரைவில் ஏமாறுவான். எமது பெயரை ஒழித்து உனது பெயரையே எங்கும் பொறிக்க நீ விரும்புவது யாரால் ? எம்மாலன்றோ ? (அதாவது தன்னலங் கருதி என்றபடி) ஆகவே உனக்குள்ளும் யாம் கரந்துறைகின்றேம். கடவுளை ஒப்ப ; வேறொன்றும் விளம்பேல்.

பொது :—உம்மை மாண்டொழிந்துபோக வற்புறுத்தி னேனே? இக்கால நிலைமையின் நெருக்கடிக்கேற்ப உமது எங்கும் நிறைந்த நிறவை (சர்வவியாபகம்) மிகச்சுருக்கிக்கொண்டு அணு வுருப் பூண்டு நடமாட வேண்டுகின்றேன். நம்மை உயர்ந்த அறிவுடைய உலகம் வெறுக்கின்றதென முன்னரே மொழிந் தேன். நான் கூறியவாறு புரிந்தால் என் அடி நிழலில் நீர் நன் கனம் வாழலாம்.

தன் :—(கண்ணீர் வார்) போய்ப்போய் பகைஞர் அடிக்கீழ்ப் பதுங்கியோ வாழ்வது. சிச்சி! "வயிறு வளர்க்கைக்கு மான மழியா-துயிர்விடுகை சால வுறும்.

பொது :—அன்பரே! அப்படிக்கூறி என்னைக்கவலையி லாழ்த் தாதீர்! தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்தம் ஒற்றனுகிய யான், பிறர் துயர் காணப்பொறேன்; உமக்கும் எனக்கும் உள்ள வேற்றுமை பெரிதன்று. கேண்மின்! யான் ஓர் நறுமணமலர்ப் பூம்பொழில், நீர் அதனுள் ஓர் மரம். யான் பெரியதோர் அருட் கடல், தாங்கள் அதிலோர் திவலை, யான் பலருடைய நன்மைகளை யும் கூர்ந்து நினைக்கின்றவன், தாம் தனித்தனிப் பேர்வழிகளின் நன்மைகளை நோக்குபவர். பலர்க்கும் பொதுவெனப் பாராட்டும் நலங்களின் மேலது எனதாட்சி, அது குலைந்து தனித்தனியாம் போது செல்வது உமது தாழ்ச்சி. ஒக்கத்தோன்றிய உடன் பிறப்புடைய நம்மிருவரின் ஏற்றத் தாழ்வைச் சுருங்கக்கூறின், கூட்டுவது, பிரிப்பது என்னும் இவ்வளவே யன்றி வேறில்லை யெனினும், இவை தரும் பயன்கள், வானகத்துக்கும் மண்ணகத் துக்குமுள்ள பாரதூர மாறுமாட்டோடொக்கும்; என்னுல் எய் துவதென்றும் எங்கும் இன்பமே. தங்களாற் சார்வது சாலத் துன்பமே. யான் கால் வைத்த இடம்பொன் கொழிக்கும். தங்கள் புக்கில் வறுமையால் விழிக்கும். எனக்கே புகழ்ச்சி. நமக்கோ இகழ்ச்சி. நன் மக்கள் பலரும் என் சார்பினர். விலங் கன்ன வெள்ளறிவினோர் அத்தனைபேரு நமக்குரியவர்.

தன் :— அத்துடன் நிறுத்து. நம்மிற் படைப்பெருக்கம் யார்க்கு?

பொது :—ஐயமேன்? உலகமறிந்த செய்தி, தங்கட்கே.

தன் :—மகிழ்கின்றேன். நடுநிலை தவறாது மொழிந்தனை! பெரும் படையுடையார்க்கே வெற்றி என்பதை ஒப்புவாயோ?

பொது :—ஒருபோதுமில்லை. தங்கள் கொடுங்கோன்மை பெருகியே 'புனல் பரந்து பொன் கொழிக்கும் இவ்வளநாடு வெறும் காடாயிற்று. உப்பில்லாப் புற்கைக்கும் வழியற்றுப் புலம்புறுகின்றது. "நம் ஆண்மை கெடுக. படைகுலைந்து பாழாக. வீரங்கட்கு விதைமுத லொழிக. பேயீரே! நம் பிதற்ற லொடுங்க" என எம்மவர் நுமர்களை வைதுரையாடுகின்றனர்.

தன் :—அட கெடுவாய்! எம்மை வைதோருள் எவரும் நன்கு வாழ்ந்தாரிலர். முன்னமே ஒரு சூடு சுட்டாய். நீயோ நெருப்பு, நாமோ விறகு. தோன்றிய விடத்திற்கு மங்களம் பாடுவது நின் வழக்கத்தொழில். அப்படியாயின் யாருக்குத்தான் நீ பேருதவி புரிந்து நற்பேர் பெறுவையோ பார்க்கின்றேம். நாம் மறந்தாலும் நம்மை மறக்குந் தன்மை மக்கட் பொதுவில் இல்லை. அதனால் எம் ஆட்சிக்கென்றும் மாறுதல் நேராது. இது துணிவே. உன் அலட்டுதலுக்காக நமது பெரிய வுருவைச் சற்று வடித்துக் கொண்டு சின்னாட்களுக்குத் தலைமறைவா யுறைகின்றேன். தவறு! தவறு!! உறைகின்றோம். உறைகின்றேன் என ஒருமையில் வாய் வைத்தது நின்னோடு பேசிய பழக்க வாசனை. நல்லது வருகின்றோம் வாழ்ந்திரு.

பொது :—(தலைதாழ்த்து வணங்கி) தேவரீர் அடிக்கடி வர வேண்டாம். ஒய்வு நாளில் ஆண்டுக் கொருமுறை தீபாவளிபோல் வந்தால் சாலும். புறப்படுங்கள். என் திரும்பித் திரும்பிப் பார்க்கின்றீர். பிடரிபிடித் துந்துவார் யாருமிலர். நான் பார்த்துக்கொள்கின்றேன்.

தன்னலம் செல்லும்போது பாடிய பாட்டுப் பின் வருமாறு.

(தொடரும்.)

௨

# தமிழகத்துப் பண்டைத்தமிழ் மக்களும், தனித்தமிழ் மொழியும்.

திருவாளர் K. சோமசுந்தரம்பிள்ளை யவர்கள் B. A.,
சட்டக்கல்லூரி மாணவர், சென்னை.

தோன்றுதற்கரிய காலத்தொன்மை வாய்ந்த ஓர் பொருளின் இயல்பெல்லாம் அறிவுவகையாற் பிழைபடாது நுணுகி ஆராய்ந்து, அப்பழம் பொருளினை அங்கையிற்கனிபோல் விளங்கச்செய்தற்கு நம்மனம் பெரிதும் ஈடுபடாநிற்கும். இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்குமுன்னர் தமிழகத்துத் தமிழ்ச் சான்றோர் உயர்நிலையும், நடையுடை பழக்கமும் அவர்தம் ஏனைய நலனும் விரித்துத் தெற்றென உணர்த்தும் பண்டைய நூல்கள் ஒருசிறிதே கிடைக்கப் பெற்றனம். இத்தகைய நூற்களினால் நாம் பயனடைவது ஒரு சிறிதெனினும் ஒரு பொருள் துணிவுபடுமாறு அதனை முற்றும் தெரிந்துகோடற்கு அந்நூற்களுடன் பழைய கல்வெட்டுகள், செப்பேடுகள் போன்ற பிற எடுத்துக் காட்டுக்களும் மிகவும் துணை செய்தலுமில. இதனாற்றான்,

நெல்லுமுயி ரன்றே நீருமுயி ரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம் [புறம்—186]

என்பதற்கேற்ற இலக்கணமுடைய் முடியுடைத் தமிழ் மன்னர்கள், நல்லிசைப் புலமை வாய்ந்த பெருந்தகையார்கள், ஏனையோராய பலப்பலர் வரலாறும் கால வரையறையும் காணப் பெற்றிலேம்.* இவ்வின்மையை ஓராது உண்மை ஆராய்ச்சியின் முறை இன்னதென அறியாமல் ஆராய்ச்சியின் வகையில் புகுந்த

---

* What we want is, in the words of Mr. V. A. Smith, 'a chronological narrative of the political vicissitudes of the land, which is an indispensable foundation for every other kind of history.'

நம்மவருட் பெரும்பான்மையார் பண்டைத்தமிழர் வரலாற்றினை வரைதலில் தேர்ச்சி பெற்றாரில்லையெனத் துணிபு கொண்டனர். தம் உண்மைப் பயனால் விளைந்த ஆராய்ச்சியினை நாட்டுதலல்லாது பேதைமையினை நன்கு நிலைநாட்டும் தகைமையுடையவர் தாம் இங்குக் கூறிய துணிவுரையினை உணர்த்துவர். தொன்னூல்கள் பல, எட்டில் தங்கியிருந்து, புணரிக்கும் செல்லிற்கும் அங்கிக்கும் பெரும் பூதத்திற்கும் காலதத்துவத்திற்கும் இரையாக, சென்றது போக இற்றைக்குத் தொன்னூலென விளங்கும் ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியம் போன்ற சில நூற்களின் சிறப்புப் பாயிரத்தைச் சற்று நோக்குங்கால், தமிழ் மக்கள் வரலாற்றுக் குறிப்பினிலும் காலக் கணக்கிலும் பெரும் பயிற்சி பெற்றா ரென்பது அறியப்படும்.

பண்டைய தமிழகத்தோர் வண்மை, கண்ணோட்டம், புரவலர் புலவர் பெருமக்கள் முதலாரது உண்மைப் பெருமைகளை வலி யுறுத்தும் வரலாற்றினை நாமறியத் தோல்காப்பியமென்ற இயல் நூலும், நன்சுவை பயக்கும் பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், ஒன்பான் சுவையும் சாலத் ததும்பப் பெற்றனவும், தமிழகத்தே நிகழ்ந்த காதைகளையே பொருளாகக் கொண்டுள்ளனவும், பொரு ணிலைத் தொடரென வழங்கப்படுவனவும், ஆராய்ச்சிக்கு இன்றி யமையாதனவுமாய காப்பியச் சுவைநலம் மல்கிய முதநூலாம் சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பண்டை நூற்களும் சிறந்த துணைக்கருவிகளாக விருக்கின்றன.

தமிழ் மக்கள் மத்திய ஆசியாக் கண்டத்தின் பக்கங்களி னின்றுந் தமிழகத்தே வந்தனரென்பது பல்லோர் தேற்றம் ஒரு சாரார் தமிழ்மக்கள் பேபிலோனியாவி லிருந்து (Babyloniiya) போந்தனரென்பர். தமிழ் மக்கள் மங்கோலிய வகுப்பினைச் சார்ந் தவரென்றும் அவர்கள் வங்காள வழியாகத் தமிழகத்தே வந்தன ரென்பதும் மற்றோர் சாரார்து கொள்கை. எர்னஸ்ட்ஹேக்கல் என்பார் (Ernest Haeckel in his History of creation and in The Pedigrace of Man) கன்னியாகுமரியின் தென்பாகத்தே லெமூரியா (Lemuria) என்ற பெருநில பரப்பு இருந்ததென்றும்

அது பின்னர்க் கடல்வாய்ப்பட்டதென்றும், அங்கிலப்பரப்பினிலே மக்கள் முதன் முதலில் தோன்றினரென்றும் வலியுறுத்திக் கூறுவர். தம்முள் மாறுபட்டு மயங்கிக்கிடக்கின்ற இக்கொள்கைகளில் 'எது சிறந்த முடிவான கொள்கை' யெனத் துணியப்படவில்லையாயினும், தமிழ் மக்கள் தொன்றுதொட்டு வந்த பழங்குடியினரென்றும், இவர்களுக்குப் பின் வந்தார் துரானியரும் ஆரியருமேயென்றும், இவ்வாரிய மக்கள்தாம் தமிழ் மக்களுக்குத் திராவிடப்பட்டம் சூட்டினரென்றும் கூறுவது சிறிதும் பிழைபடாது.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் 'நடுவு நின்ற நன்னெஞ்சினராய்,' 'தொடர்பு பற்றாதே வருத்தமுற்றார் மேற் செல்வதாய அருளும்,' தன்னாற் புரக்கப்படுவார்மேல் விழுமிய அன்பும் பெற்றுப் பயன் கருதாதே அறம் வளர்த்து, 'கொலைகடிந்து புலவு நீக்கி,' ஏனைய உயிர்களிடத்தே செந்தண்மை பூண்டு குரவரைப் பேணி, சரண் புகுந்தார்க்கு இடர் விளைக்காது, இளைத்தார்க்குத் துயரியற்றாது, பொய்க்கரி கூறாது, எளியார்மேல் பகைப்புறாது, கள்ளுண்ணாமை, கன்னியைக் கற்பழிக்காமை, கனகந் திருடாமை முதலிய குற்றங்களைக் கடிந்து சீரிய ஒழுக்கத்தினராய்ப் பெருமிதமல்லாத அற்ற மறைக்கும் பெருமையுடன் மன்னா உலகத்தே தம் புகழ் நிறீஇ இன்புற்று வாழ்ந்தனர். மற்றும் இவர்கள்,

..................................இந்திர
ரமிழ்த மியைவ் தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர்.' [புறம்—182.]

'நுமக்கு மிக்கவயதாகியும் நரை நுமக்கில்லையோ என்ற சான்றோரை நோக்கிப் பிசிராந்தையார்,

'யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழுமூரே'

என்றதனால் தமிழ் மக்களது மிக்குயர் நிலைமையும் சான்றாண் மையும் அறியப் பெற்றாம்.

இத்தகைய நல் வாழ்விற்குரிய நல்லொழுக்கம் வாய்ந்தாரு டன் வடநாட்டாரிய மக்கள் ஓர் கலப்புக் குழுவினராகித் தாங் கொண்ட கொள்கையே வெகு சிறப்புடைத்தெனத் தம்முள் உயர்வுகொண்டு தண்டமிழ்ச் சான்றோரது சிறப்பியல்பினிற் குரிய கருத்திற்கு முற்றுமாறாகப் பலபெருமாறுதல்கள் ஏற்படுத் தித் தாம் பண்டுதொட்டு வழக்கத்திற்குக் கொண்டுவந்த தம் புல் லிய வாழ்க்கையினைத் தமிழகத்தே நிலைநாட்டி, அஃதொடு நில் லாது பண்டைத்தமிழ் மக்களை இகழ்ந்தும் வந்தனர். ஆரிய மாக் களது கூட்டுறவினால், பண்டு அத்தன்மைவாய்ந்திருந்த தமிழ் மக் களது தனி ஒற்றுமை குலைந்து, பழமையும் கிழமையும் கழிவுற் றன: பண்டைத் தமிழ்ப்பாக்கள் காணுதற்கியலாது நிலைதடுமாறி அழிவுற்றன: ஒத்த அன்பிற்குரிய ஐந்திணை ஒழுக்கம் குன்றியது: தமிழ் மக்களது இறைவனுக்குரிய முத்தீவேள்வி முற்றும் நீக்கப் பட்டு ஆரியமக்களது பிற உயிர்க்கொலை வேள்வி நின்று நிலவியது.

பண்டைத் தமிழ் மக்கள் மலையும், (குறிஞ்சி) காடும், (முல்லை) சுரமும், (பாலை,) பழனமும் (மருதம்) கடலைச்சார்ந்த விடமும் (நெய்தல்) ஆகிய இவ் ஐவகைப் பாகுபாட்டினையுடைய தமிழ கத்தே தம் தம் நிலத்திற்கேற்பத் தேனழித்தும், பயிர்நட்டும், உப்பு விளைத்தும், நிரை மேய்த்தும் பிறபுரிந்தும் வாழ்ந்து வந்த னர். இத்தொன்மையார் வழியில் தோன்றினவர்தாம் நம் பெரு நில முடியுடைச் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள். 'வழங்

குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பிற் றலைபிரிதலின்று' என்பதற்குப் பரிமேலழகர் கூறிய உரையினைக் காண்க. அஃது 'பழங்குடி—தொன்றுதொட்டு வந்தகுடி; தொன்று தொட்டுவருதல்—சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டுவருதல்' என்பது.

துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியுமில்லை என்றதனால் [புறம் 355]

தொன்மையாகக் கருதப்படும் குடிகள் நான்கல்லது பிறவல்லவென உணர்த்தப்பெற்றோம். இவர்களில் கடம்பரென்போர் மலைநாட்டகத்தே வதிந்து இருலினை யழித்துத் தேனெடுத்து விற்பனை செய்வோர்: பாணர் தோற்கருவி, துளைக்கருவி முதலிய நரம்புக்கருவிகளில் பாணிசைக்கும் கண்டியர். பறையர், துடியரென்போர் அடவிகளில் திரிந்து ஆங்குள்ள விலங்குகளை வேட்டையாடி அவைகளின் இறைச்சியினை யுண்ணும் வகுப்பினர்.

இனி, பண்டைத் தமிழ் இலக்கண நூல்களின் வரம்பினைத் தழுவி ஐவகை நிலங்களும் அந்நிலங்களுக்குரிய மக்களும், அவைகளுக்குரிய திணைகளும் ஆயவற்றைச்சிறிது ஆராயப்புகுவாம். தொல்காப்பியனார்,

'மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே'

என நானிலத்தை மட்டும் கூறிப் பாலை நிலத்தினை ஏனைய நிலங்களோடு சேர்க்காது விட்டனர். இதன் காரணம் யாதெனநோக்கின், அஃது பின்வருமாறு: நால்வகை நிலங்களுக்குரிய ஒழுக்கங்களாகிய இருத்தல் கூடல், ஊடல், இரங்கல் என்பனவற்றின் பிரிதல் இடையே நேர்தலினால், பிரிதலும் பிரிதலினிமித்தமுமாகிய பாலையினை ஏனைய நானிலங்களோடு சேர்க்காது அஃது 'நடுவணாற்றிணை'க்குரியதென்றனர் தொல்காப்பியனர். குறிஞ்சியிலும் முல்லையிலும் பாலை வருகின்ற நேர்மையினை ஈண்டே காண்க.

'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்.' [சிலப்பதிகாரம்]

முல்லை நிலமக்கள்—அமுதர், அண்டர், இடையர், ஆயர், குடவர், கோவலர், ஆய்ச்சியர், இடைச்சியர், குடத்தியர், பொதுவியர்—ஆடுமாடுகளை மேய்த்து, ஞான் ழுயல் முதலியவைகளை வேட்டையாடி, முல்லையாழ் முதலாய இசைக் கருவிகளில் இனிமையாகப் பண்பாடவல்லராய் இன்மையென்பதறியாது களிப்புடன் காட்டினில் வாழ்ந்தனர். இவர்களுக்குச் சிறந்த தொழில் குரவைக் கூத்தாடுதலும், பண்டமாற்றுதலும், மற்போர் செய்தலும் ஆகிய இவைகளே. ஆயர்கள் நிரைமேய்த்தல் பற்றிய குறிப்பு ஈண்டே காண்க:—'செருப்புவிடாமற் கிடந்த வழுவழுந்தின வலிமையுடைய அடியினையும், பசுக்களுக்கு வருத்தஞ்செய்யும் தடியூன்றின மரங்களை ஒடித்துக் கொடுக்கும் கோடரியாற் றழும்பிருந்த வலிய கையினையும், இரண்டு தலையினும் உறியினையுடைய காக்கள் மேலேயிருந்ததினால் உண்டாகிய தழும்பு மிக்க மயிரெழுந்த தோட்கட்டினையும், எல்லா மணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும் காட்டிடத்தனவாகிய உயர்கின்ற உச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளினுள்ளவுமாகிய பல பூக்கள் கலந்து நெருங்கிய கலம்பகமாகிய மாலையினையும், ஒன்றாய்ப் பொருந்திய உடையினையுமுடைய பாற்சோற்றை உண்கின்ற இடையன், கன்றுகள் பொருந்தின பசுத்திரளோடே காட்டிலே தங்கித் தீக்கடைக்கோலாலே அழகிய நுண்ணியதாய் விளங்கும் புகைமுற்படப்பிறக்கும்படி கையாலே கடைந்து கொண்ட சிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியாற் றுளையிட்ட கரிய துளையினையுடைய குழலாலெழுப்பின மிகவுமினிய பாலையென்கின்ற பண்ணைத் தான் வெறுக்கில் குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டிய மாற்கயிறாகிய விரலாலே தெறித்து வாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்கும் குறிஞ்சி யென்கின்றபண்' [பெரும்பாணாற்றுப்படை.]

பால் விலையினைக் கூறியேகும் ஆயர் :—

'பாணிகொண்ட பல்கான் மெல்லுறி
ஞெலிகோற் கலப்பை யதனொடு சுருக்கிப்
பறிப்புறத் திட்ட பாலுடை யிடைய(ன்)' [நற்றிணை]

குறிஞ்சி நில மக்கள்—கானவர், குன்றவர், குறவர், குறத்தியர் கொடிச்சியர்—தினையும் மூங்கிலரிசியுமுண்டு தினைவிளைத்தும் தேனழித்தும் கிழங்ககழ்ந்தும் சாமை முதலிய தானிய வகைகளைப் பயிரிட்டும் வந்தனர்.

குறவர்கள் தினையறுத்தல் :—

'புனத்த
நீடிலை விளைதினைக் கொடுங்கா னிமரக்
கொடுங்குரல் கோடல் கண்ணிச் செழும்பல
பல்கிளைக் குறவர்' [பெருங்கௌசிகனார்.]

குரவைக் கூத்தும் குறவரும் :—

'மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்
மாரி யான்று மழைமேக் குயர்கெனக்
கடவுட் பேணிய குறவர் மக்கள்
... .... .... .... ... ... ... ...
வாங்கமைப் பழுனிய தேறன் மகிழ்ந்து
வேங்கை முன்றிற் குரவை.

மருதநில மக்கள்-வேளாளர், உழவர், கடையர், மன்னர், களமர், உழத்தியர், கடைசியர். பயிரிடுதல், பண்டமாற்றுதல், கடாவிடுதல் ஆகிய இச்சிறப்புத் தொழிலினை யுடையார். மருதமெனு மிசையினை மருதயாழினி லிசைத்துப் பாடும் வன்மையுடையார். போரிற்குச் செல்லும் மனத் திண்மைவாய்ந்து புறங்கொடாச் சிறந்த வீரர்கள்.

உழவர் உழுதல் :—

'குடியிருப்பு நிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாக உழுகின்ற உழவுத் தொழிலை யுடையோர் உழவுத் தொழிலிலே பயின்ற பெரிய எருதுகளை வாயிலே நுகத்தைப் பூட்டிக்கொண்டு

சென்று, பிடியினது வாயையொத்த வளைந்த வாயையுடைய கலப்பையினுடைய உடும்பினது முகத்தை யொத்த பெருங்கொழு மறைய அமுக்கி முற்படவளையவுழுது விதைத்த பின்னர்'. [பெரும் பாணாற்றுப்படை.]

'வடிக்கதிர் திரித்த வன்ஞாட் பெருவலை, யுடைய நெடுங் கட லலைத்த கொடுந்திமிற் பரவதர் நெய்தநில மக்களுளொருவர். ['பரதவர், நுளையர், கடலர், வளையர், சலவர், திமிலர், நெய்த நில மக்கள்.' சூடாமணி] மீன்படுத்தல், உணங்கல், உப்புவிளைத்தல் ஆகிய இவைகளே பரதவாது சிறந்த தொழில்கள்.

பரதவர் குவிக்கப்பட்ட மீன்களைக் காத்தல் :—

'.....................................பரதவர்
கொழுமீன் கொள்கை யழிமணற் குவைஇ
மீனெய் யட்டிக் கிளிஞ்சில் பொத்திய
சிறுதீ விளக்கில்' [நற்றிணை.]

பரதவாது தன்மை :—

'பரதவர் முழுத் திங்கட் பருவ நாளில் கடலில் மீன்பிடிக்கப் போகாமல் பசிய தழையினையுடைய கரிய நிறத்தையுமுடைய தம் மகளிரோடே கூடி நெடிய தூண்டிலிற் காம்புகள் சார்த்திவைத்த குறிய இறப்பினையுடைய குடியிருப்பு நடுவில் வலைகிடந்துலரும் மணலையுடைய முற்றம் சேர்ந்த தமது மனையில் சினச்சுறுமீனின் கொம்பைநட்டு அதனிடத்தே யேற்றிய வலிய தெய்வங் காரணமாக விழுதையுடைய தாழையின் அடியில் நின்ற வெண்டாளிப் பூவினாற் செய்த மாலையினையுடையராய்த் தாழை மலரைச் சூடியும் பனங்கள்ளுண்டும் நெற்கள்ளையுண்டு விளையாடியும் காவிரிகடலோடு கலக்குமிடத்துப் புகாரிடத்தில் கடலாடியும் உப்புப்போக நீரிலே குளித்தும் ஞெண்டுகளை யாட்டியும் பரக்கின்ற திரையிலே விளையாடியும் பாவைகளைப் பண்ணியும் பகற்பொழுதெல்லாம் விளையாடுவர்' [பட்டினப்பாலை].

பாலை நிலமக்கள் :—குறும்பர், மறவர், எயினர், மறத்தியர், எயிற்றியர்—எப்பொருளும் விளைதலில்லாத மணல் செறிந்த வனங்களிலே திரிந்து, காளியைத் தங்குலத்தெய்வமாகக் கொண்டு

ஆறலைத்தும், சூரைகொண்டும், மற்றும் முடியுடை மூவேந்தர் களுக்குப் போரிற் பல்லுதவி புரிந்தும் காலங்கழித்தனர்.

இந்த ஐவகை நிலத்திற்குரிய மக்கள் தம்மை அழகு படுத்திக் கொள்ள உடுத்த ஆடைகள் மாற் பட்டையினது நாரினுற் பின்னப் பெற்றவைகள்: அணிந்த அணிகள் இலையணி, பூவணி முதலிய.

'மானு ருடுக்கை மலையுறை குறவ' [உலோச்சனுர்.]
'பிடிமுதிரிடையினுடன் தழைத்துகிற்பெண்ணினேடும்
தொடுமரைத்தோலன்வில்லன்மாவுரியுடையன்தோன்ற'
[சிந்தாமணி]
'முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மரா அத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குல் திளைப்ப உடீஇ' [திருமுருகாற்றுப்படை]
'வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச்
சுரியிரும் பித்தை பொலியச் சூடி' [புறம்]
'கழுனி, யாம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்' [புறம்]

இத்தகைய ஐந்நிலமக்கள் வதிந்த நிலப்பரப்பு தமிழகமென்ப. 'இமிழ் கடல் வரைப்பிற் றமிழக மறிய' என்பது சிலப்பதிகாரம். 'சம்புத் தீவினுட் டமிழக மருங்கில்' என்பது மணிமேகலை. 'வையக வரைப்பிற் றமிழகம்' என்பது புறம். 'இமிழ்கடல் வேலித் தமிழகம்' என்பது பதிற்றுப்பத்து. இத்தமிழகத்து எல்லையினை,

'வடவேங்கடம் தென்குமரி, யாயிடைத்,
தமிழ்கூறு நல்லுலகம்' [தொல்காப்பியம்]
'வேங்கடம் குமரி தீம்புனற் பெளவமென்
றிந்நான் கெல்லை தமிழகத்து வழக்கே' [சிகண்டி.]
'நெடியோன் குன்றமும் தொடியோன் பெளவமும்
தமிழ்வரம் படுத்த தண்புனல் நாடு. [சிலம்பு.]

'வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்கம்'. [சிறு காக்கை பாடினியார்]

'குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்' [நன்னூல்]

'மேற்கடல் கீழ்க்கடல் வேங்கடங் குமரி
யாகிய வெல்லையு ளருந்தமிழ்ப் பௌவம்'
[இலக்கண விளக்கம்].

முதலியவாற்றான் நன் குணாலாகும். இந் நிலப்பரப்பினிலாண்ட பெருநிதிக் கிழவராம் சேர, சோழ, பாண்டியமன்னர்கள், வடக்கே இமயம்வரை தங்கள் ஆணை செல்லத் தமிழகத்தின் பரப்பினைப் பெரும் பரப்பாக வாக்கி ஆண்டனரென்பது பண்டை நூற்களிலே நன்கு புலனாகும். பாண்டியன் பல்யாக சாலை முது குடுமிப் பெரு வழுதி காலத்தில் தமிழகம்

'வடாஅது, பனிபடு நெடுவரை வடக்குந்
தெனாஅது, உருகெழு குமரியின் றெற்குங்
குணாஅது, கரைபொரு தொடுகடற் குணக்குங்
குடாஅது, தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்'
[புறம்-6]

பரவியிருந்ததென்பதூஉம், கோப் பெருஞ் சோழன் காலத்துத் தமிழகம்

'குமரியம் பெருந்துறை யயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயி னிடையது
சோழ நன் னாடு' [புறம்-67]

பரவியிருந்த தென்பதூஉம், சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் காலத்துத் தமிழகம் இமயத்தை வடவெல்லையாக யுடையதென்பதூஉம்,

'அந்தி யந்தண ரருங்கட னிறுக்கு
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே' [புறம்-2]

என்பன போன்ற பிறவும் கண்டுகொள்க.

கடைச் சங்க நூல்களிலொன்ருகிய சிலப்பதிகாரக் காதையில்

‘வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள’ என்பதற்கு

அடியார்க்கு நல்லார் பின்வருமாறு உரை கூறுவாராயினர். ‘அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியெனு மாற்றிற்கு மிடையே எழு நூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலைநாடும், ஏழ் பின்பாலைநாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்லம் முதலிய பன் மலைநாடும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரி வட பெருங்கோட்டின் காறும் கடல் கொண்டழித்தலாற் குமரியாகிய பௌவமென்ருரென்க. ‘பஃறுளியாறு குமரிப் பக்கத்தோர் யாறு’ என உரையாசிரியர் கூறியிருப்பதனுல் சரித்திர ஆராய்ச்சி வல்லார் குமரிக்கும் பஃறுளிக்கு மிடைப்பட்ட நிலம் எழுநூறு காவத நிலமன்றென்பார். வேறு சிலர் ‘பனம் பாரனர் வடவேங்கடந் தென் குமரி யாற்றினை எல்லையாகக் கூறிப்பாயிரம் செய்தமையின், சகரர் வேள்விக் குதிரை நாடித்தொட்ட கடலகத்துட்பட்டுக் குமரியாறு பனைநாட்டொடு கெடுவதற்கு முன்னையதென்பதும்’ எனப் பேராசிரியர் கூறியுள்ள உரையினை பற்றுக்கோடாகக்கொண்டு கடலால் அழிவுற்ற நிலப்பகுதி பனை நாடொன்றே எழுநூறு காவத நிலப்பகுதி யன்று என்பார். எழுநூறு காவத தூரமென்பது சுமார் ஆயிரத்து அறு நூற்ருறு மைலைக் குறிக்குமேயொழிய வேறு வெகு தூரத்தினைக் குறியாது. சற்றேறக்குறைய ஆயிரத்து அறுநூற்ருறு மைல் முற்றளவுடைய சிறு நாடு தென்னுட்டில் கடலால் அழிவுற்றதெனக்கண்டு சிறிதும் மனம் பொருத முடித்திருமாறன் அந்நாட்டின் அளவினதாகவுள்ள சிற்சில நாடுகளைச் சேரசோழ மன்னர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட செய்தியினைக் கலித்தொகை நான்காம் கலியாகிய முல்லைக்கலியில் நன்குணரலாகும் :—

'மலிதிரை யூர்ந்துதம் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்'.

இதனைக்குறித்தே உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம்முரையில் 'அங்ஙனமாகிய நிலக்குறைக்குச் சோழ நாட்டெல்லையிலே முத்தூர் கூற்றமும் சேரமனாட்டுக் குண்டூர்க் கூற்றமும் எனுமிவற்றை இழந்த நாட்டிற்காக ஆண்ட தென்னவன்' எனக் குறிப்பிடுவதனால், முத்தூர் கூற்றமும் குண்டூர்க் கூற்றமும் சேர்ந்த முற்றளவு கடலாற் கொள்ளப்பட்ட நாட்டினது முற்றளவேயாகுமென வுய்த்துணர்க. மற்றும் முடத்திருமாறன் கடல் கோட்பட்ட நாடுகளின் அளவினதாகவுள்ள நாடுகளைச் சேர சோழ மன்னர்களிடமிருந்து தனக்குரிமையாகப் பெற்றுக்கொண்டதனால், இம் மன்னனுக்கு நிலந்தரு திருவிற் பாண்டியனெனப் பிறிதொரு பெயரும் வழங்கலாயிற்றென்பதையு மறிக. இதனானே 'பஃறுளியாற்றுடன் பன் மலையடுக்கத்துக் குமரிக்கோடும்' தமிழகத் தொருபகுதியா யிருந்ததென்பதனை அறியப்பெற்றாம். மற்றும் தமிழகம் பெருநிலப் பரப்பினை வாய்ந்ததெனப் பின்வருமிருபாக்களாலும் உணரலாம். அவை,

'தென்பாண்டி குட்டம் குடங்கற்கா வேண்பூழி
பன்றியருவா வதன் வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சே
ரேதமில் பன்னிருநாட் டெண்.

'சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக் குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம் வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே' என்பனவாம்.

இப் பெரு நிலப்பரப்பு கடல் வாய்ப்பட்டுச் சுருங்கி,

'நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாடு' [சிலம்பு]

ஆகிய பின்னர் பெருநில மன்னர்களும் வலிகுறைந்து தம்மொளி மழுங்கலுற்றுத் தமிழகத்தைச் சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு, தொண்டை நாடென நான்கு வகையாகப் பாகுபடுத்தி ஆண்டனர். இதனைப் பின்வரும் பாக்கள் வலியுறுத்தி விளக்குதல் காண்க.

அவை, 'வடக்குத் தலம்பழனி வான்கிழக்குச் செங்கோடு
குடதிசைக்குக் கோழிக்கூ டாகும்—கடற்கரையி
ஞேரமது தெற்காகு மோரெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு,'
'கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரளும் வெள்ளாறு
குடதிசைக்குக் கோட்டைக் கரையாம்—வடதிசைக்கு
ஏழ முதலா விருபத்து நாற்காதஞ்
சோழநாட் டெல்லையெனச் சொல்.'
'வெள்ளாற்றின் தெற்கு மேற்குப் பெருவெளியாம்
தெள்ளாம் புனற்கன்னி தெற்காகும்—உள்ளான்
ஆழ்ந்த கடற்கிழக் கன்பத் தறுகாதம்
பாண்டிய நாட் டெல்லைப் பதி.'
'மேற்குப் பவழமலை வேங்கட நேர்வடக்காம்
ஆர்க்கு முவரி யணிகிழக்குச்—சீர்களுயர்
தெற்குப் பினைகை திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாட்டெல்லை நாடு' என்பனவாம்.

(தொடரும்)

உ

# பாட வேறுபாடுகள்.

பண்டிதர், அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள், தமிழ் விரிவுரையாளர், அரசியலார் கல்லூரி, கும்பகோணம்.

---

பாடசாலை முடிவுப் பரீட்சையின் இவ்வருடப் பொதுத் தமிழ்ப் பாடப் புத்தகத்தில் (The Tamil Text book for Group A of the S. S. L. C. Examination 1928—29) வரும் E. விருத்தகிரி என்ற தலைப்பில் முதலாகவுள்ளது

"காமமென் கின்ற கதுவுவெந் தீயும்.........
..............................பெரியநா யகியே".

என்னும் கவி.

இதற்கு உரையும், விளக்கக் குறிப்பும் எழுதியிட்டார், இதன் பொருள் இன்னது எனத் தமக்கு விளங்காமையாலோ, பிறவாற்றாலோ பாடலையும் மாற்றி, உரையையும் பிழைபட எழுதியிருக்கின்றனர். இது எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக்கெடுத்தான்; உரைகாரன் இரண்டையுங் கெடுத்தான் என்னும் புதுப்பழமொழியை நினைப்பூட்டுவதாக இருக்கின்றது.

இப்பாடலிற் கேள்வி, ஒருகால் பரீட்சைக்கு வராது போயினும், அல்லது இப்பாடலின் உண்மைப் பொருளைத் தமிழாசிரியர்கள் பாடம் கூறியிருப்பினும் இக்கட்டுரை பயன்படாதேயெனின், அன்று; தாம் கற்பவற்றைக் கசடறக் கற்றல் மாணவர்க்கோர் நலந்தருவதே யாகலானும், போலிப் பொருளை யொழித்து உண்மைப் பொருளை யறிவுறுத்திய தங்களாசிரியர்களை, மாணவர் இன்னும் அதிகமாகப் பாராட்டற்கோர் ஏதுவாயிருத்தலானும் ஒருவாறு பயனுடைத்தேயென இக்கவியின் உண்மைப் பொருளை யெழுதத் தொடங்குகிறேன்.

I. பாட புத்தகத்தில், (Text Book) இக் கவியின் 7, 8-ஆம் வரிகளில்,

"தழலின்நின்று ஆடிப் புலிகரி புரிபோர்
தடுத்தஆண் துணையொடும் வருவாய்"

எனக் கீற்றிட்டவை மாற்றிப் பாடங்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் உண்மையான பாடம்,

"தழலின்நின் ருடிப் புலிகரி யுரிபோர்த்து
அடுத்தஆண் துணையொடும் வருவாய்" என்பதே

யாம். எங்ஙனமெனின்,

(அ) ............'புலியும் யானையும் உள்ள என்மனமாகிய வனத்தில் தனியே வருவதற்கு நீ பயந்தால், அவை புரிந்த போரைவென்ற ஆண்துணையோடும் வரலாம்' என்னும் புத்தக (Text Book) பாடத்தைக் காட்டிலும், 'நீ துணைக்கொண்டுவா விருக்கும் ஆண், புலியையும் யானையையும் வென்றமையை என் சொற்கொண்டே யுணர்தல் வேண்டா; கருதிய பொருள் கைகூட வேண்டும் முயற்சியினர் கூற்றினுள் இதுவும் ஒன்றென ஒழியற்க; அவற்றின் தோலைப் போர்த்திருத்தலினாலேயே எளிதின் உணரலாம்' (ஆமையினோடு பன்றியின் கொம்பு இவை யணிந்திருத்தல் போல) எனப் பொருள்தரலால் உண்மைப் பாடமே பொருள் சிறத்தல் காண்க.

(ஆ) இன்னும், முற்காட்டியபடி, போர் தடுத்த என்ற புத்தக பாடத்திலும் போர்த்து அடுத்த என்னும் உண்மைப்பாடமே பொருள் சிறந்திருக்கிறது. எங்ஙனமெனில், போர்தடுத்த வென்பது—போர்புரிய வலியில்லாதோர் சரண்படிந்து போரைத்தடுக்கினுந் தடுக்கலாம், அல்லது ஒரு உடன்பாட்டினால் போரைத் தடுக்கினும் தடுக்கலாம் என்னும் பொருள் படுமாகலானும்; தடுத்தல் என்ற சொல் வெல்லுதல் என்ற பொருளில் நேரே வாராது ஆகலானும் பொருள் சிறக்கவில்லை.

**போர்த்து அடுத்த** என்ற தொடரில் **போர்த்து** என்ற சொல் **போர்த்தமையானே,** வென்றமைதானே போதரும்* என்னும் பொருள்படுமாகலானும்; **அடுத்த** என்ற சொல், 'அத்தகைய ஆண் துணையிருப்பது எங்கோ? எனத்தேடுதல் வேண்டா: உன் அணுக்கராகவே யிருக்கின்றனர்' என்னும் பொருள்தரு மாகலானும் பொருள் சிறந்திருத்தல் **காண்க.**

இனி, தடுத்த என்னும் புத்தக பாடமே மோனை நல முடையது; அடுத்த என்னும் பாடத்தால் மோனை சிதைவுபடுமே யென்னில்,

பொருள் சிறக்க வருமிடத்து எதுகை மோனைகளைப் பொருள் செய்யார் நல்லிசைப் புலவர் ஆகலானும்; இவ்வாசிரியரும் (சிவப் பிரகாச சாமிகள்) இப்பகுதி (விருத்தகிரி) யின் இரண்டாம் பாடலின் 9-ஆம் வரியில் "எட்டிநற் றிகிரி பறித்தேறிந்து" என்று கூறினவர், மோனை கருதி 'இபத்தினை' யென்று கூறுமல். "சொல் வனவற்றை யெளிதில் தெளிந்துகொள்ளுமாறு பிறருக்குச் சொல்லுக"‡ என்னும் நீதிநூல் கடைப்பிடித்து யானை யென்றே கூறியிருத்தலானும் அது பொருளன்றென்க.

II. இனி, பாட புத்தகத்தில் இக்கவியின் 9-முதல் 16-ஆம் வரிவரையுள்ளவையாகிய,

"ஈமவெள் ளெலும்பு இங்கு இடப்படும் எனத்தான்
எலும்பணி கட்வுள்மா நதியாய்
இருந்துநல் லன்னங் கோண்டுமேய் வெளுப்ப
இணைதபு கங்கையை யிகழ்ந்து
கீழ்மைசோல் கின்றது ஒன்றுமின் றுயின்
கிடைக்குமோ இதன்குணம் என்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே

* பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்த தன்மை உரை செய—என்பது கம்ப ராமாயணம்.

‡ 'எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்
நுண்பொருள் காணப தறிவு.' திருக்குறள்.

என்னும் பிற்பகுதியில், கீற்றிட்ட ‘இங்கு’ என்ற சொல் மாற்றிப் பாடங்கொள்ளப்பட்டிருக்கிறது.

தடித்த எழுத்தில் உள்ளவற்றிற்கு உரையும் விளக்கக் குறிப்பும், நூலாசிரியர் கருத்து உரைகாரருக்கு விளங்காமையால், பிழைபட எழுதப்பட்டிருக்கின்றன.

உரை:—பாட புத்தகம் 61, 62-ஆம் பக்கத்தில் கண்டபடி :—

(அ) தான் எலும்பணி கடவுள் மாநதியாய்—தானும் எலும்பை யணிகின்ற தெய்வத்தன்மை பொருந்திய சிறந்த நதியாகி ;

(ஆ) இணைதபு கங்கையை யிகழ்ந்து, கீழ்மை சொல்கின்றது ஒன்று மின்றாயின்—ஒப்பற்ற கங்கையைப் பழித்துக் கூறும் இழிகுணம் சிறிதும் இல்லையென்று கூறினாலும் ;

(இ) கிடைக்குமோ இதன் குணம்—இந்த மணிமுத்த நதியின் சிறந்த குணம் கிடைக்குமோ அக் கங்கைக்கு என்பன.

விளக்கக் குறிப்பு :— பாடப் புத்தகம் 62, 63-ஆம் பக்கத்திற் கண்டபடி :—

(அ) கங்கை எலும்பணி கடவுள் மா நதியாகி, நல்லன்னங்கொண்டு மெய் வெளுத்திருத்தலால், மணிமுத்தநதிக் கொப்பாவதில் யாதொரு தாழ்வுமில்லை யென்று கூறப்பட்டாலும் தாழ்வொன்றுமில்லாமை மாத்திரத்தாலேயே அதற்குச் சமானமாகாது.

(ஆ) ஏனெனில், அம்பிகையினுருவங்கொண்டிருத்தல், சிவசாரூபமளித்தல் முதலிய சிறந்த குணங்கள் கங்கையினிடத்து இல்லாமையால் அக்குணங்களையுடைய மணிமுத்தா நதி கங்கையிலும் சிறந்து விளங்குமாதலால் என்க.

(இ) மணி முத்த நதியில் எலும்பை யெறிதலும் அன்னத்தை யிடுதலும் உண்டு, அவை கங்கையிலும் இடப்படுதலுண்டு என்பன. இவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் கருத்து :— ‘ஒப்பற்றதாயிருந்த கங்கையானது தான் மணிமுத்த

நதியை ஒப்பாக வேண்டுமென்றெண்ணி இந்நதியில் செத்தவர் எலும்பிடுதலையும், தென்புலத்தாருக்குப் பிண்டமிடுதலால் இந்நதி வெளுத்திருத்தலையுங்கண்டு, தானும் அவ்வாறே எலும்பிடப் பெற்றும், பிண்டமிடப்பெற்று வெளுத்தும் ஒத்தது; அப்படியிருந்தும், சில தன்மைகளால் ஒப்பாகத் தன்னால் முடியவில்லை; அதனால் உலகினர் இம் மணிமுத்த நதியின் தன்மை கங்கைக்குக் கிடைக்குமா என்று கூறுவர்' என்பதேயாம்.

இவ்வுரையும் விளக்கக் குறிப்பும் போலியாதலை முதற்கண் காண்பாம்.

(அ) ஆற்றில் எலும்பை யெறிந்தால் அது ஆற்றில் முழுகி அடியிலுள்ள மணலோடும் கல்லோடும் கலந்துவிடும். அதனால் ஒரு ஆறு அவ்வெலும்பை யணிந்திருக்கிறது என்று கூறலாமா? அப்படியாயின், மணலை யணிந்திருக்கிற ஆறு; சிறு கற்களை யணிந்திருக்கிற ஆறு என்று கூறுவதை யெங்கும் கண்டிலோமே.

(ஆ) கங்கையில் ஒருகுற்றமும் இல்லை யென்பது கருத்தாயின் அவ்வாறே சுருங்கக் கூறாமல் வளைத்து வளைத்துச் சொற்பெருக்கிக்கூறுவானேன்?* இந்நூலாசிரியர் சொற்சுருங்க உரைக்கும் தகையினர் என்பதை அவர் நூலொடு பழகினவர் அனைவருமறிவர்.

(இ) கிடைக்குமோ என்ற மாத்திரையான் அக் கங்கைக்கு என்பது எவ்வாற்றலால் பொருந்தும்?

(ஈ) தன்னுள் எலும்பு இடப்படும் மணிமுத்த நதியை ஒப்பாக வேண்டினால், கங்கையும் அவ்வாறு செய்யாமல் அதனின் வேறாக எலும்பை யணிந்தால் எவ்வாறு அதை யொப்பாகும்?

---

* இவ்வாறு கூறுவதைக் கோமுட்டித் தீர்மானம் என்பார். இது என்ன பருப்பு? எனக் கேட்டதற்கு 'அந்தரு சேருகொளி கந்திபப்புகா உண்டவலனனி செப்பவச்சுனனி திருமாணிப்பா யோசிஞ்சி சுன்னாரு' அனைவரும் இதுவொரு துவரைப் பருப்பாக இருக்கவேண்டுமென்று சொல்லலாமெனத் தீர்மானிப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர் என வருவது.

(உ) அன்றியும் மணிமுத்த நதி இயல்பில் மெய் வெளுத்திருப்பது என்பது விசுவாமித்திரர் சிருட்டியாக இருக்கிறது. அப்படி யிருந்தாலன்றோ கங்கையும் அவ்வாறு மெய் வெளுத்தற்கு முயலவேண்டும். அதற்கில்லாத வொருதன்மை கங்கைக்கு இருத்தலால் கங்கையன்றோ உயர்வடைய வேண்டும்.

(ஊ) எலும்பிடுதலென்ற உபலக்கணத்தினாலேயே, மற்றைப் பிண்டம் முதலிய இடுதல் அடங்குமாதலால் அதனை வேறு கூறுவதால் பயன் யாது?

(எ) ஆசிரியர் வருணனையாகக் கூறியிருப்பதை விட்டுவிட்டு இவ்வுரைகாரர் தாமாகக் கங்கையை இகழ்ந்து கூறிப் பாவத்திற்கேன் ஆளாகவேண்டும்? கங்கை அம்பிகையிடத்து உதித்ததென்பதும், மூழ்கினாருக்குப் பெரும்பயன் தருமென்பதும் உலகறி பொருளாயிருக்க, இவர் கங்கைக்கு அத்தன்மையில்லை யென்று பொய் கூறுவானேன்?

(ஏ) இன்னொரு ஆற்றையொப்பாக முயலுகின்ற கங்கைக்கு, "இணைதபு" என்ற அடை கொடுத்ததேன்? இது, பெயர் கூந்தலழகு; தலை முழுமொட்டை யெனல் போன்றது.

(ஐ) சோற்றுத்திரளை யாற்றில் எறிந்தால் அது ஆற்று நீரில் மூழ்கி மறைந்து போவதன்றி அதனால் ஆறு மெய்வெளுத்திருப்பது எப்படி?

அன்னம் என்ற மாத்திரையானே, பறவை முதலிய வேறு நினைவின்றிச் சோறு என நினைவெழுந்தமையால் இவ்வுரை (Notes) யெழுதியவர் ஒரு அந்தணரே போலும். *

இவற்றால் இவ்வுரையும் விளக்கக் குறிப்பும் போலி ஆயினமை கண்டாம்.

இனி இதன் (பாடலின் பிற்பகுதி) உண்மைப் பாடம் :—

'ஈமவெள் ளெலும்புஅங்கு இடப்படு" மென்பதாம்.

அது பின்வருங் கருத்தினாலே விளங்கும்.

---

* பிதிரர்கடனில் அன்ன சிரார்த்தம் அந்தணர்க்குரிய தென்ப.

1. கங்கை நதி தன்னில் (செத்தவர்) எலும்பு பட்ட மாத்திரையானே, அவ்வெலும்பினாலாகிய உடலும், அவ்வுடல் பற்றுக்கோடான உயிரும் கூடி யீட்டிய வினையைக் கழுவி அவற்றை நற்பேறடையச் செய்தலானும், சத்துவகுணத்தின் நிறமாகிய† வெண்ணிறம் படைத்திருத்தலானும் தான் ஒப்பற்றதாயிருந்தது.

மணிமுத்த நதியும், தன்னில் எரியப்படும் எலும்புபற்றி உயிர்களைக் கதியுய்த்தலானும், தன்னுள் நீந்தி விளையாடும் அன்னப் பறவையின் தொகுதியால் வெண்ணிறம் படைத்திருத்தலானும் அக்கங்கையை ஒப்பாயிற்று.

2. இன்னும், கங்கைநதி போந்தது, ஒரு அரசனின் பிதிரர் பொருட்டாய் முடிந்தது; மணிமுத்தநதி போந்ததோ, இறைவன் பூசை முதலிய பணிகளுக்காக முடிந்தது.‡ இதை நோக்க அக்கங்கையினும் மணிமுத்த நதியே சிறந்ததாயிற்று.

3. இச்சிறப்பினைக் கண்ட வுலகினர் இதனைப் புகழ்ந்து கங்கையை இகழ்வாராயினர்.

4. அதனால், மணிமுத்தநதி, ஒப்பற்றதாயிருந்த கங்கையைத் தான் ஒப்பானதோடமையாது, அதனின் மேம்பட்டு நின்றும், அதனையிகழ்விக்கத் தானொருகாரணமாயிருக்கும் ஒரு குற்ற மாத்திரம் உடையதாயிற்று எனப் பின்னும் கூறுவாராயினர். (இது பழிப்பது போலப் புகழ் புலப்படுத்தல்).

5. இந்த ஒரு குற்றமும் மணிமுத்தநதிக் கில்லாவிட்டால் இதன் மேன்மை, யுலகில் வேறெந்த நதிக்குண்டு? எனவும் உலகினர் கூறுவாராயினர். இவ்வாறு கூறக் கிளர்ந்து வருகிற மணிமுத்தநதி யென்பதே யிதன் உண்மைக் கருத்தாம். இக் கருத்திற்கேற்ப உரை கூறிக்கொள்க. தான் என்றது மணிமுத்த நதியை. அங்கு என்றது கங்கையை.

---

†கங்கைநதி வெண்ணிறமுடையதென்பதை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் நீராடற் பருவம் மூன்றாஞ் செய்யுளாலுணர்க.

‡ இக்கருத்தினை, "கங்கைநதியொரு வேந்தன் .........." என்று வரும் திருவானைக்காப் புராணச் செய்யுளாலுணர்க.

(கங்கையில் எலும்பிடலால்), தன்னிலும் எலும்பிடப்பெற்றது.

(கங்கை வெண்ணிறம் படைத்தலால்) தானும் மெய்வெளுத்தது.

| | |
|---|---|
| (கங்கையின் வரவு ஓரரசனின் பிதிரர் பொருட்டாய் முடிந்தது) | தன் வரவு இறைவன் பூசை முதலிய பணிகளுக்கேற்ற தாயிருந்தது* |

எனக் கவி தம் கருத்தைச் சொல்லாற்றலால் பெறுவித்தார். இவ்வாறே பொருள் பெறுவித்தலை, 'சமன்செய்து சீர்தூக்கும்' என்னும் திருக்குறளாலும் அறியலாம்.

சொல்கின்ற தென்பதில் பிறவினை விகுதி தொக்குநின்றது. (நீளல் கருதி இதனோடு நிறுத்துகிறேன்.)

இங்குத்திருத்திய பாடமே உண்மை யென்பதனைச் சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்கசாமிகள் பதிப்பினை நோக்கியும், இக்கருத்தே யுண்மைக் கருத்தென்பதை வரலாற்று முறையின் வந்தார் வாய்க்கேட்டுந் தெளிக.

* எலும்பணி கடவுள்மா நதியாயிருந்து என்ற தொடர் பொருள் கோளின் பொருட்டுப் பின்னர்க் கொள்ளப்பட்டது.

உ

# குமரகுருபரவடிகளும்

## அவர் நூல்களும்.

---

திருவாளர், இ. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள், வடமொழிக் கல்லூரித் தமிழாசிரியர், திருவையாறு.

---

(முற்றொடர்ச்சி—15.)

'முன்னர்க்-கலிவெண் பாவெனு மொலிபெறு மலங்கல்
குகன்றிரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் முந்நான் கியற்றி' எ.ம்., 'உலைவிலா் தியாரும்
தீதெலா மொருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவல்' எனவும் கூறும்

அடிகளால் பதினன்கு நூல்களுமே செய்துளார் அம்மெய்த்தவ முனிவரர் எனக்கொள்ளக் கிடக்கின்றதேயன்றிக் கயிலைக் கலம்பகமும் காசித்துண்டிக்களிற்றுப் பதிகமும் பாடின வரலாறு குறிப்பாயேனுங் காணப்பட்டிலது. அம்மட்டோ ஓர் பழமை முரணுமுண்டு. அது:—

"முந்நான் கன்றியும் மொழிதரு கயிலைக்
கலம்பகந் துண்டிக் களிற்றுப் பதிகம்
அவ்விரண் டியற்றிச் சைவநற் சமய
நிலையையுங் காட்டி" என்பது.

இவ்வடிகள் புதுப்பதிப்பிற் காணப்படுவது (சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு) மீனட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய குமரகுருபர சுவாமிகள் சரித்திரத்திற் காணப்பட்டபடியே புதுப்பித்த பாடவேற்றுமையோ அன்றிப் பழம்பிரதியின்கண் கிடைத்ததோ; ஆய்தல் அறிஞர் கடன்.

சிறப்புப்பாயிரம் தன்னுஞ்சமய நிலையென்பதற்கும், சைவநற்சமய நிலையென்பதற்குமுள்ள வேற்றுமையு மொன்றுமின்று. இப்பதிப்பிற்கு முன் பா, சோமஞான சுந்தரமையரவர்களாலும்

பலதுறைகளிற் பற்றிய பேரறிஞராம் இராமலிங்க அடிகளாலும் பதிப்பித்த நூற்றொகுதிக்கண் இப்பாடங்களும் காணப்பட்டில.

கயிலைக்கலம்பகமும் துண்டி விநாயகர் பதிகமும் பாடியிருக்கலாம். இன்னும் பலவும் பாடியிருக்கலாம். அவைகளழிவுற்று மிருக்கலாம். ஆயின் நீடு நினைக்குங் காட்சியராமாட்சியுடைப் பெரியாரீட்டியன வன்னவாமோ என்பதும், அவர் காலத்துப் புலவராலியற்றப்பட்ட சிறப்புப்பாயிரத்துக் காணப்படாமையால் அக்காலத்துள்ளேயே மறைந்தன வென்பதும் ஐயம். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய சரித்திரங்கொண்டே யிப்பிறழ்வு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இக்காலத்திலோவெனில், சிலர் விழைவுபற்றியும், சிலர் விளைவு பற்றியும் ஒருவர் பதிப்பித்த நூற்கோ அன்றி நூற்ற நூற்கோ தன்னோக்கின்படியே மட்டின்றிப் புகழ்ந்து பாடி முடிக்கின்றனர். இன்னுஞ் சிலர், சீரிய செந்தமிழ் நூலிற்கு ஆங்கில முன்னுரை யளிக்கின்றனர். இஃது பெருவிந்தை. அரசியல் மொழியாயிருந்தால் யாவருமெண்மையினுணர்வர் என அவர் உரைக்கப்புகுவர். ஆங்கில நூலொன்றிற்குத் தமிழில் முகவுரை யொன்றுண்டா எனில் இன்றே. அங்ஙனமிருக்க இது செயல் மிகவுநன்றன்றே. தமிழ்ப் பெருமையுணராதா ரீதுணர்வரே யெனில் அவர்மாட்டளிமீக்கூர்ந்துள்ளார் போலும். இச்சிறப்புப் பாயிரம் அவ்வடிகள் காலத்ததாகவே கோடல் வேண்டும். கொள்ளினிவ் விருநூல்களும் பற்றிப்பாடியிருக்கவுங் கூடும். இருப்பினிபற்றுமலுமிரார்.

தன்னுஞ் சமய நிலையைபுங்காட்டி யென்பதனுல் சில கொள்கையினர் தம்மோடு வந்து வீண்வழக்குரையாட அவ்வழக்குரை யினைத் தக்கபடியாகப் பல நெறிகளைக்காட்டி யுண்மையினை யுணர்த்துச்சாடியிருத்தல் வேண்டும் என்பதும் வெளியாகலாம். இது பற்றியே திருமலைநாயகர் காண பிள்ளைப் பெருமாளையங்காரோடும் காஞ்சிப் பிள்ளைப்பெருமாளையங்காரோடும், சில மாயாவாதிகளோடுஞ் சமயவாதிகளோடுஞ் சண்டையீட்டனரெனப் புராணம் பாடினர் போலும். குமரகுருபரமுனிவரர் எனும் பெயருடைப் பெரியார் மூவரிருந்தன ரெனவுந் தெரிகின்றது.

"இல்லறந் தியக்குறு நிலையென,
இளமையிற்றுறந்து வளமைசேர் தருமை
மாசிலாமணியெனுந் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற்புத குணகுமா
குருபரனெனும் பெயர் மருவியமுனியே"

என்னும் அடிகளான், அறிவினுக்கறிவாகிய இறைவனும் அறுமுகப்புத்தேள் உறுபெருங் கருணையான், ஊமைத்தன்மையொருவிப் பின்னன்னவனருளாணைப்படியே இல்லற நல்லறமன்றெனு முண்மை கைவரப்பெற்றுத், தவமும் தவமுடையார்க்கே யாமெனும் பெருமொழியைத் தன்னகப்படுத்தி, துறவுளம்பூண்டு தலங்களைக் காண, வடநாடுபுக்கு வழியிடைப் பட்ட கோயில்களை வழிபடுமுறையான் வழிபட்டுத் தவநிலையும் அறிவினிலையும் அறிய வுணர்த்துஞ் சீலமார் குரவனும் மாசிலா மணியின் மாசிலாவடியை மாசிலாவகைக்கு மாண்புறவணங்கி அவ்விருநிலையும் பெற்றுப் பற்றற்றவுளத்தார் பற்றும் அணிகலனும் ஆடையும் அவராற்றா அன்புடனேற்றஉஇ முனிவரெனும் பெயருஞ் சூட்டிக்கொண்டு பின்னர்க் குரவராணை நெறியே காசிப் பதிபோய்த் தவமிருந்து செயற்கரிய செயல்பல முற்றுவித்துப் பலதிருத்தளி கட்டுவித்து, அவ்வறமென்று நின்று நிலவப் பொருளுந் தொகுப்பித்துத், தான் நிறுத்திய அறப்பள்ளி முதலியன நடாத்துதற்கு, ஒரு அறிவுடைப் பெரியனை முனிவராக்கியவர்க்காணை தந்து நன்னாளில் இறைவனறுமலரடிகளை யொன்றியுலப்பிலா இன்புற்றனர். இவர் வழிவந்தவரே யாவர் திருப்பனந்தாளிலுள்ள மடபதிகள் முதலினோர். அக்காசியம்பதியிலுள்ள திருத்தளிகட்கிட்ட பொருள்வருவாய் கொண்டே மீண்டும் அறப்பள்ளி முதலியனவமைத்துமமைப்பித்தும் பேரின்பமுறுகின்றனர். உறுதற்கேற்றயாவு முறுவித்து முற்றும் குமாகுருபரவடிகளின் நல்லுட்கோளின்படியே சிறிது முறைபிறழாது நல்லறமாற்றி வருகின்றார்களென்ப துலகமறிந்த தொன்றன்றோ!

சிறப்புப்பாயிரம் முற்றும் பின்பற்றியதே சரித்திரசார பஞ்சகமாம். "பிள்ளைக் கவிமுதல் மூந்நான்கியற்றி" எனவும், "நீதிநெறி விளக்கமென் றேதமில்பனுவலும்" எனவும், "கலிவெண்பா

வெனு மொலிபெறுமலங்கல்'' எனவும், ''தன்னுஞ்சமய நிலையை யுங்காட்டி'' எனவும், கூறுமடிகளான் சில அருளிச்செயல்க ணிகழ்திருக்கவேண்டும் எனக் குறிப்பாய்க் கிடைத்தலானும், காசிப்பதியிலுள்ள குமாரசாமி மடத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிக் குறிப்பும் திருவுருவமும் அமைக்கப்பட்டுள்ளன. அவை கொண் டும் பனசைப்பதியிலுள்ள திருத்தளிவரலாறு கொண்டும் இது குறிக்கப்பட்டதாம். இதனை இராமலிங்கவடிக ளியற்றினரென் றுங் கூறுவதுண்டு.

இதன்பின்னெழுந்தது முருகதாசர் பாடிய புராணம். குமர குருபரசுவாமிகள் சரித்திரம் குமரகுருபரர் புராணம் இவைக ளீட்டிய புலவர்கள் ஒரு காலத்தவர். முருகதாசரால் தொண்டர் மாக்கதையிலுள்ள ''ஐந்துபோறிவுங் கண்களே'' என்னும் பாவை வினவியதன்பினர் அருண்மொழியா மறைமொழியுரைத்த வரலாறு மறுக்கப்படுவதாலும் பிறவரலாறு முரணிக் கூறப்படுவ தாலும் பின்னெழுந்தது குமரகுருபரசாமி புராணம். மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் 300 செய்யுட்கு மேற்பட்ட செய்யுட் களால் பலவணிகள்கொடு பலவரலாறு போற்றிக் குறித்திருப்ப தால் குமரகுருபரசுவாமிகள் சரித்திரமும் தாசர் காலத்ததுவேயாம். இவர்கள் காலமும் 50 ஆண்டுகட்கு முன்னர்த்தானாம். இவை கட்குப் பின்னர், திருவாவடுதுறையிற் பேராசிரியரும் பெரும் புலமையுடையரும், ஒழுக்கமே பெரிதுடைப் பெரியரும், சைவ நற்கலைகளனைத்தையு முள்ளவாறுணர்ந் தோதுவித்தவரும், [இரு வகைச் செல்வமும் தாமே வந்திடையப்பெற்ற பாலவனத்தம் சமீந்தாரும் கற்றவர் நற்றவரென விருதிறத்தாருக்கும் வரிசை நோக்கி வழங்கு வள்ளலும், தனக்கென வாளாப் பிறர்க்குரி யாரும் முருகப்பெருமானே யென்னுங் கலைவாணரும் ஆகிய பாண்டித்துரையெனுந் தமிழ்ப்பெருமகனார் ஏழை மக்கட்கு யேழைமை நீங்கி மேன்மையுறுமா றருள்புரிந்து நிறுவிய] மதுரைத்தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் போராய்ச்சியாளரும் ஆகிய சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் பெருமான் அவர்கள் குமரகுருபரசுவாமிகள் புராணம் பாடி வைத்துளார்கள். அஃது வெளிவந்திலது போலும்.

இனி, முருகதாசர் முனைந்தியற்றிய குமாரகுருபரசாமி புராணத்தின் முரணினையாராய்வாம். இவர் பாக்கள் பாடுவதிலும் புதிது புதிதாகப் பழங்கதை கட்டுவதிலும் மிகவல்லுநர் என்பது இவரியற்றிய திருவரங்கத் திருவாயிரம், புலவர்புராணம், தனிப்பாடல்கள் முதலியவற்றின லறியக்கிடக்கும். பிள்ளைப் பெருமாளையங்கார் புராணத்து "இவரைச் சிற்சிலிளஞ் சைவ ரேசுவார்" எனவும், துறவறச் செல்வச் சீரிய மன்னராம் பட்டினத்து அடிகள் புராணத்து அவர் தையற்காரன்மாட்டு நல்லறிவு பெற்றார் எனவும் சாற்றியிருத்தலையும் நோக்கல் வேண்டும்.

கைலாசமாபுரத்திற் றோன்றினவரென்றால், இத்தாசர், வைகுண்ட நகரிற்றோன்றினவராவர் என்று கூறுவதும், தாய் தந்தை பெயரையுங் குறிக்காது செல்வதும் மிகவும் வியக்கத்தக்கன. ஊமைதீர்ந்த வரலாறு முரணிக் கூறினுமொருவாறேத்த நிலையேயாம். மூங்கையொழிந்து பாடிய நூல் கந்தர் கலிவெண்பாவாயிருப்ப பஃறொடைவெண்பா பாடினரென்பது எப்பொருட்டெனவாயின் ஒரு பொருட்டும் புலப்பட்டிலது. கலிவெண்பா வெனு மோலி பெறுமலங்கல், என்ற வடியை யுற்றுநோக்கிற் புலப்படும்.

கலிவெண்பாவிற்கும் பஃறொடைவெண்பாவிற்கும் வேற்றுமை இரண்டும் வெண்டளையான் வருவதேனும் துள்ளலிசை நிகழுநிற்கும் சீர்களைப் பெரிதுந்தழுவி மோனை முதலிய தொடை நியமமின்றி முடிவது கலிவெண்பா வென்றும், செப்பலிசை வழுவாதே நேரிசை வெண்பாப் போன்றுவது இன்னிசை வெண்பாப் போன்றுவது நிகழ்வதே பஃறொடை வெண்பாவென்றுங் கூறுவர் இயனூலார். பேராசிரியர் மடல், உலா முதலிய பொருண்மேற் பலவடிகளான் வருபவைகளையும் இக்காலத்தார் கலிவெண்பா என்னும் பெயர் கொடுத்து வழங்குவரென்பர். பண்டையார் வழக்கல்லவெனின், ஓசைபற்றியோதின் துள்ளலிசையே பெரிதும் புலப்படுதலின் கலிவெண்பாவேயாமென்க. பஃறொடை வெண்பா வென்றல்சாலாது. பாயிரத்தினுமப்பெயர் குறிப்பிடப் படாமையுங் காண்க.

ஊமையொழிந்த வொப்பிலா அடிகள், சின்னாட்செந்தூரின் கண்ணேயே வதிந்து, பின்னர், பாவலர் நாவலர் அடியவர் ஆய விவர்குழாம் குழுமப் பற்பலவிடங்களிற்புக்குச் சொன்மாரிபெய்யும் எண்ணங்கொண்டு வடநாடு நோக்கிவருகையில், தருமபுரத் திருத்தளியில் நான்காவது பெருங் குரவனுயெழுந்தருளியிருந்த மாசிலாமணிப் பெயருடைய முனிவரர் வருங்காலவுணர்வினராய், நன்னிலை யெய்து நல்லறிவுறநாள் வந்தண்மிய அடியவன் ஒருவன் வருகின்ருன் என்றுட்கொண்டு அடிசிலமைப்பானை நோக்கி 'அப்பா! ஓரன்பன் நம்மை நாடிவருகின்ருன் அவன் பொருட்டு நம் பரிகலத்தை யொரு தொன்னையிலெடுத்து வைத்திரும்' என ஆணைசெய்து தன்னிருக்கையுற்ருர் என்றும், பின்னர் குமரகுருபரவடிகள், பழவினைப்பயத்தால் அறுமுகவனருட்பெருக்கால் தருமையை யெய்தி அறப்பள்ளியினுணுழைந்து அறிவின்குரவன் அடிகளைக் கண்ணாரக்கண்டு வணங்கிட அதுகண்டுளங்களிகூர்ந்து அருளுரை புகன்று பரிகலங் கொடுத்து உலகியலின்றிறத்தையும் உண்மைப் பொருளினியலையுமுணர்த்தினர் என்றும் ஆறைவது பெருவிந்தையே. மீட்டும் "ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள" வெனும் பெரிய புராணச் செய்யுட் பொருளைப் பகர்தி யென மருட்டித் தெருட்டி யருளுறுமறிவினையுணர்த்தினரென அறிவின் குரவனருளினையுணராது கூறுவர் சிலர் என மறுத்தலுஞ் செய்கின்றனர். எப்பொருட்டாலது கூறுகின்றனரோ? அறிவுடைப் பெரியரே யாய்க. சைவ நற்கலைகள் பகரும் பெற்றியுமீண்டுப் பொருந்தாதென்பதுமுணர்தல் வேண்டும்.

தொடரும்.

# பாண்டியர் வரலாறு.

திருவாளர், T. V. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள்,
தமிழாசிரியர், கும்பகோணம்.

(முற்றொடர்ச்சி—127.)

## III

### கடைச்சங்க காலத்துப் பாண்டியர்கள்.

பாண்டியரது தலைநகராகிய மதுரையில் விளங்கிய கடைச் சங்கம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டோடு முடிவெய்தியது என்பது ஆராய்ச்சியாளரது கொள்கையாகும். ஆகவே, கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னர் ஆட்சிபுரிந்த பாண்டிய அரசர்களது வரலாறே இப்பகுதியில் எழுதப்படுகின்றது. இறையனார் களவியற்கு உரைகண்ட தொல்லாசிரியர் கடைச் சங்கத்தைப் புரந்துவந்த பாண்டி மன்னர்கள் நாற்பத்தொன்பதின்மர் ஆவர் என்று அவ்வுரையில் கூறியுள்ளார்.* சிலப்பதிகாரத்தின் உரைப் பாயிரத்திற்கு மேற்கோளாகக் காட்டப்பெற்ற 'வேங்கடங்குமரி தீம்புனற் பௌவம்' என்று தொடங்கும் ஆசிரியப்பாவும் அங்ஙனமே உணர்த்துகின்றது.† எனவே, கடைச்சங்க நாட்களில் அரசு செலுத்திய பாண்டிய அரசர்கள் நாற்பத்தொன்பதின்மர் ஆவர் என்பது நன்கு புலப்படுகின்றது. அன்னோர் ஆட்சிபுரிந்த காலம் ஆயிரத் தெண்ணூற்றைம்பது ஆண்டுகள் என்பர் களவியல் உரைகண்ட பெரியார். ஆகவே, ஒவ்வொரு மன்னனது 'சராசரி' ஆட்சிக்காலம் சற்றேறக்குறைய முப்பத்தெட்டாண்டுகளாகும். கடைச்சங்க காலத்துப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மருள்

* இறையனார் அகப்பொருள் உரை (சி. வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்பு) பக்கம் 5.

† சிலப்பதிகாரம்—பக்கங்கள் 2, 3.

சிலரது பெயர்களே நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு ஆகிய நூற்களால் அறியப்படுகின்றன. அவர்களுள் பாண்டியன் முடத்திருமாறன் என்பவனே மிகப் பழமைவாய்ந்தவன் என்பது களவியலுரையால் பெறப்படுகின்றது. எனவே, அவன் வரலாற்றை முதலில் ஆராய்வாம்.

பாண்டியன் முடத்திருமாறன் :—குமரிநாடு கடல்கோளால் அழிந்த பின்னர், குமரியாற்றிற்கும் தாம்பிரபரணியாற்றிற்கும் இடையிலுள்ள நிலப்பரப்பில் தங்கியிருந்த தமிழ் மக்களுக்குத் தலைநகராயிருந்த கபாடபுரத்தில் வீற்றிருந்து அரசாண்ட பாண்டிய அரசர் ஐம்பத்தொன்பதின்மருள் இவ்வேந்தனே இறுதியில் வாழ்ந்தவன் ஆவன். ஆகவே இவன் இடைச்சங்கத்தின் இறுதியில் இருந்தவன் ஆதல் வேண்டும். இவன் காலத்தில் நிகழ்ந்த ஒரு கடல்கோளால் பாண்டிநாட்டின் பெரும்பகுதியும் அதன் தலைநகராகியகபாடபுரமும் அழிந்தொழிந்தன.* இக்கடல்கோளினால் எண்ணிறந்த தமிழ்நூல்கள் இறந்தன. இச்செய்தியை,

'ஏரண முருவம் யோக மிசைகணக் கிரதஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள'

என்னும் பழைய பாடலும் உணர்த்துதல் காண்க. தமிழ்மக்கள் செய்த தவப்பயனால் எஞ்சிநின்ற நூல் தொல்காப்பியம் ஒன்றேயாகும். இக்கடல் கோளுக்குத் தப்பியுய்ந்த பாண்டியன் முடத்திருமாறனும் செந்தமிழ்ப் புலவர்களும் சிறிது வடக்கே சென்று மணலூர் என்னும் ஒரு சிறு நகரத்தில் தங்கினார்கள். இவர்கள் சிலகாலம் அந்நகரில் தங்கியிருந்து பின்னர், மதுரை என்று தற்காலத்து வழங்கும் கூடன்மாநகரை யடைந்தனர். இப்பாண்டியனும் அந்நகரை வளம்படுத்தித் தனக்குரிய தலைநகராகக் கொண்டு கடைச்சங்கத்தை அங்கு நிறுவினான்.† பல நல்லிசைப்புலவர்கள்

* இறையனார் அகப்பொருளுரை—பக்கம் 5.
† ௸ ௸

தமிழாராய்ச்சி செய்யத்தொடங்கிப் பற்பல அரிய செந்தமிழ் நூல்கள் இயற்றுவாராயினர். இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழும் உயர்நிலையை எய்தின. எனவே, கடைச்சங்கத்தை மதுரைமாநகரின்கண் நிறுவி அதனைப்போற்றி வளர்த்துவந்த பாண்டியன் முடத்திருமாறன் நம் தமிழ்த்தாயின் பொருட்டு ஆற்றிய அரும்பணி அளவிட்டுரைக்குந் தரத்ததன்று. இம் மன்னனே தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த ஒண்டிறற்நூசில் ஆவன். இவன் பாலைத்திணையையும் குறிஞ்சித்திணையையும் இன் சுவை பொருந்தப் பாடுவதில் வன்மையுடையவன். எட்டுத் தொகை நூற்களுள் ஒன்றாகிய நற்றிணையில் இவன் பாடிய இரண்டுபாடல்கள் காணப்படுகின்றன. (நற்றிணை 105; 228) இவனைப்பற்றிய பிற செய்திகள் தற்காலத்தில் புலப்படவில்லை.

பாண்டியன் மதிவாணன் :—இவன் கடைச் சங்கத்தைப் புரந்துவந்த பாண்டிய அரசர்களுள் ஒருவன் ஆவன். சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்குநல்லார் இவன் கடைச் சங்கம். நிறீஇய பாண்டியருள் கவியரங்கேறியவன் என்று தம் உரைப்பாயிரத்தில் கூறியுள்ளார். ஆகவே, இவன் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து விளங்கிய வேந்தன் ஆவன். இவன் ஒரு நாடகத் தமிழ்நூல் இயற்றியுள்ளான். அது மதிவாணர் நாடகத் தமிழ்நூல் எனப்படும். அந்நூல் சூத்திரப் பாவாலும் வெண்பாவாலும் இயற்றப் பெற்றது என்பர். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதுவதற்கு மேற்கோளாகக் கொண்ட * ஐந்து இசை நாடகநூல்களுள் மதிவாணன் நாடகத்தமிழ்நூலும் ஒன்றாகும். அது முதனூலிலுள்ள வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தின் இலக்கணத்தை உணர்த்தும் சிறப்புடையது என்று சிலப்பதிகார உரையாளர் குறித்துள்ளனர். இம்மன்னன் இயற்றிய அத்தகைய பெருமைவாய்ந்த நாடகத் தமிழ்நூல் இந்நாளில் கிடைக்கப் பெறாதிருத்தல் பெரிதும் வருந்தத்தக்கதாகும். சிற்சில சூத்திரங்களே சிலப்பதிகார உரையில் காணப்படுகின்றன:

---

* இசை நுணுக்கம்; இந்திரகாளியம்; பஞ்சமரபு; பரதசேனாபதீயம்; மதிவாணர் நாடகத் தமிழ்நூல் என்பன.

போற்கைப் பாண்டியன்:—இவன் கடைச்சங்க நாளில் விளங்கிய பாண்டியருள் ஒருவன். கண்ணகி முன்தோன்றிய மதுரைமா தெய்வம் பாண்டியர்களது செங்கோற் பெருமையை அவளுக்குணர்த்துங்கால், இவன் செய்தியையும் எடுத்துரைத்துப் புகழ்ந்துள்ளது. சிலப்பதிகாரத்திலுள்ள கட்டுரைகாதையிற் காணப்படும் அவ்வரலாறு அடியில் வருமாறு:—

கீரந்தை என்னும் வேதியன் ஒருவன் தன் மனைவியை மன்றத்தின்கண் இருத்தி, அரசனது செங்கோல் அவளைக்காக்கும் என்று கூறிவிட்டு வெளியே சென்றனன். மற்றொரு நாள் அவன் தன் இல்லாளுடன் மனையகத்திருக்குங்கால், பாண்டிய அரசன் ஒருவன் அவளது பேரழகினாற் பிணிக்கப்பட்டுத் தீய நினைவுடையவனாய்க் கதவைப் புடைத்தனன். உடனே அம் மறையோன் தன் மனைவிபால் ஐயமுற்று அவளை நோக்க, அதனை யுணர்ந்த அந்நங்கை, 'முன்னொரு நாள், அரசனது செங்கோல் என்னைக் காக்குமென்று கூறி மன்றத்திருத்திச் சென்றீர்களே; இன்று அச்செங்கோல் காவாதோ?' என்றுரைத்தனள். அதனைப் புறத்தே கேட்டுக்கொண்டு நின்ற அரசன், தன் அடாச் செய்கைக்குப் பெரிதும் வருந்தி, விரைவில் அரண்மனைக்குச் சென்று, அது தனக்குத் தகவன்று என்றெண்ணித் தன் செய்கைக்குத் தானே சான்றாகி, வாளால் தன் கையைக் குறைத்துக் கொண்டனன்; பிறகு, பொன்னால் பொய்க் கையமைத்துக்கொண்டு, பாண்டி நாட்டை ஆட்சி புரிந்து வந்தான். இதுபற்றியே இவன் பொற் கைப் பாண்டியன் என்று வழங்கப்பெற்றான்.

சிலர், இவ்வரலாற்றை வேறுபடவும் கூறுவர். ஆயினும் சிலப்பதிகாரம், பழமொழியாகிய இரு நூல்களாலும் அறியப் படுவது இதுவேயாகும். இஃது இப் பாண்டியன் கோல் கோடாது முறைசெய்த மாட்சியை உணர்த்துகின்றது.

கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி:—இவ்வேந்தன் கடைச் சங்க நாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவன் ஆவன். இளம் பருவத்திலேயே பேரறிவினனாக இருந்தமைபற்றி இவன் 'இளம் பெருவழுதி' என்ற பெயர் பெற்றனன் போலும்.

'கடலுண்மாய்ந்த' என்னும் அடைமொழிகளால் இவன் கடலில் கலமிவர்ந்து சென்றபோது அங்கு மூழ்கி யிறந்திருத்தல் வேண்டு மென்பது புலப்படுகின்றது. இவன் தண்டமிழ்ப் புலமையிற் சிறந்த பெருந்தகை மன்னன் ஆவன். இவன் இயற்றிய இரண்டு பாடல்கள் பரிபாடலிலும் புற நானூற்றிலும் உள்ளன. (பரி பாடல் 15 ; புறநானூறு 182). இவன் தான் இயற்றிய பரிபாட லில் * சிலம்பாற்றுல் அழகு பெற்றுள்ள திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்பையும் அங்கு எழுந்தருளி யிருக்கும் கண்ணபிரான் பலதேவன் ஆகிய இருவரது பெருமையையும் நன்கு விளக்கி யுள்ளான். இனி, அக் குன்றம் திருமாலை யொக்கும் என்றும், தன்னைக் கண்டோருடைய மயக்கத்தைப் போக்கும் பெருமை யுடையது என்றும், ஆதலால், சென்றேனும் கண்டேனும் திசை நோக்கியேனும் அதனைக் குடும்பத்துடன் வழிபடுமின் என்றும் உலகத்தாரை நோக்கி இவ் வேந்தன் அப் பாடலில் கூறியிருத்த லும் அக் குன்றத்தின் அடியின்கண் உறைதலே தான் எய்த விரும்புவது என்று முடித்திருத்தலும் இவன் திருமாலிடத்துக் கொண்டிருந்த பேரன்பினை இனிது புலப்படுத்தா நிற்கும். இவன் புறநானூற்றில் பாடியுள்ள பொருண்மொழிக் காஞ்சி † இவனது பேரறிவினையும் உள்ளக் கிடக்கையினையும் தெள்ளிதின் உணர்த் தும் இயல்புடையதாயிருத்தலின் அப்பாடலை ஈண்டு வரைகின்றாம்.

'உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி

---

* இப்பாடற்கு இசைவகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனார் என்பார்.

† பொருண் மொழிக்காஞ்சி என்பது உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதி தருகிற பொருளை ஒருவனுக்குக் கூறுதல் என்பர்.

னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.* (புறம் 182)

பாண்டியன் அறிவுடை நம்பி :—இவன் பாண்டியர் குடியில் தோன்றிய ஒரு மன்னன் ஆவன். இவன் இருவேறு நல்வினைகளின் பயன்களாயுள்ள அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கே எய்தி அதற்கேற்றவாறு பேரறிவுடைய பெருங்கொடை வள்ளலாக வாழ்ந்தவன். கோப்பெருஞ் சோழற்கு உயிர்த்தோழரும் பாண்டிநாட்டினரும் பேரறிஞருமாகிய பிசிராந்தையார் இவ்வரசன்மீது பொருண்மொழிக்காஞ்சி பாடியிருத்தலின் இவன் அச்சோழன் காலத்தில் நிலவியவன் என்பது பெறப்படுகின்றது. (புறம் 184.) இவன் பாடிய பாடல்களாக நற்றிணையில் ஒன்றும் குறுந்தொகையில் ஒன்றும் அகநானூற்றில் ஒன்றும் புறநானூற்றில் ஒன்றும் உள்ளன. (நற்றிணை 15; குறுந்தொகை 230; அகம் 28; புறம் 188) எனவே, இவனது செந்தமிழ்ப்புலமை அறிஞர்கள் பெரிதும் மதித்துப் போற்றற்குரியதாகும். இவன், மக்களாலுண்டாகும் இன்பம் இம்மை இன்பம் எல்லாவற்றினும் சிறந்ததென்றும் அத்தகைய மக்கள் இல்லாதவர்கட்கு இம்மைப் பயன் ஒரு சிறிதும் இல்லை என்றும் கூறியிருக்கும் அரியபாடல் எல்லோரும் படித்துணரத்தக்க தொன்றாகலின், அதனைப் பின்னே காண்க.

---

* இதன் பொருள் :—உண்டேகாண், இவ்வுலகம்; இந்திரர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தானாதல் தவத்தானாதல் தமக்குவந்து கூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலுமிலர்; யாரோடும் வெறுப்பிலர்; பிறர் அஞ்சத்தகுந் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அது தீர்த்தற் பொருட்டு மடிந்திருத்தலுமிலர்; புகழ்கிடைக்கின் தம்முடைய உயிரையுங் கொடுப்பர்; பழியெனின் அதனோடு உலகமுழுதும் பெறினும் கொள்ளார்; மனக்கவற்சியில்லார்; அப்பெற்றித்தாகிய மாட்சிமைப்பட்ட அத்தன்மையராகித் தமக்கென்று முயலாத வலிய முயற்சியையுடைய பிறர் பொருட்டென முயல்வார் உண்டாதலான் என்பது.

படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே. * (புறம் 188.)

**ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியன்**:—இவன் நல்லிசைப் புலமை வாய்ந்த செல்வப் பாண்டியருள் ஒருவன் ஆவன். அகநானூற்றி லும் புறநானூற்றிலும் காணப்படும் இவனது பாடல்களானும் 'ஒல்லையூர் தந்த' என்னும் அடைமொழிகளானும் இவனது புலமையும் வீரமும் நன்கு விளங்கும். 'மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்து' என்று தொடங்கும் இவனது புறநானூற்றுப் பாடலால் இவன் பெரிய போர் வீரன் என்பதும், தனக்கொத்த கல்வியறிவு வாய்ந்த பட்டத்தரசியைச் சிறிதும் பிரிதலாற்றாப் பேரன்புடையான் என்பதும், அறனிலை திரியாத்திறனுடைச் செங்கோலினன் என்பதும், வையையால் வளமிக்க மையல் என்னும் ஊரில் வாழ்ந்த மாவன் என்பானையும் எயில் என்னும் ஊரிலிருந்த ஆந்தை, புகழ்மிக்க அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் என்பாரையும் தன் கண்போன்ற நண்பினராகக் கொண்டு ஒழுகியவன் என்பதும், தனக்குரிய பாண்டி நாடாளும் அரசுரிமையை எவற்றினுஞ் சிறந்ததாகக் கருதி யிருந்தவன் என்பதும் இனிது புலப்படுகின்றன.

---

* இதன் பொருள் :—படைக்கப்படுஞ் செல்வம் பலவற்றையும் படைத்துப் பலருடனே கூடவுண்ணும் உடைமைமிக்க செல்வத்தை யுடையோ ராயினும் காலம் இடையே யுண்டாகக் குறுகக் குறுக நடந்து சென்று சிறியகையை நீட்டிக் கலத்தின்கட் கிடந்ததனைத் தரையிலேயிட்டும் கூடப் பிசைந்து தோண்டியும் வாயாற் கவ்வியும் கையால் துழாவியும் நெய்யை யுடைய சோற்றை உடம்பின்கட்படச் சிதறியும் இங்ஙனம் அறிவை இன்பத்தான் மயக்கும் புதல்வரை இல்லாதார்க்குப் பயனாகிய முடிக்கப்படும் பொருளில்லை, தாம் உயிர்வாழுநாளின்கண் என்பது.

இவனது மனைவியாகிய பெருங் கோப்பெண்டு என்பாள் நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியல் நங்கையாவள். அருங் கற்பும் பெரும் புலமையும் வாய்ந்த இவ்வம்மையின் பெருமையை உரைக்க வல்லார் யாவர்? குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற கல்வியும் ஒருங்கே யமையப்பெற்ற இவ்விருவரும் காதலனும் காதலியுமாக அன்புற்று ஆற்றிய இல்வாழ்க்கையே வாழ்க்கை யாகும்; அதுவே துறக்க வின்பமும் ஆகும். இத்தகையினரே ஒத்த கிழவனும் கிழத்தியுமாவர். உருவ முதலியற்றால் ஒத்து அறிவால் வேற்றுமையுறின் அன்னோர் சிறந்த காதலன் காதலிகள் ஆகார்; தம்முள் ஒத்தவரும் ஆகார். அறிவு வீற்றிருந்த செறி வுடை நெஞ்சினராகிய பூதப்பாண்டியனும் இவனது காதலியாகிய பெருங் கோப்பெண்டும் இனிது வாழ்ந்துவரும் நாளில் இத்தகைய அறிவுடையாரது இல்வாழ்க்கையில் அழுக்காறுகொண்ட அறிவில் கொடுங்கூற்றம் பூதப்பாண்டியன் இன்னுயிரைக் கவர்ந்து சென்றது. இந்நிலையில் இவனது அறிவுடைப் பெருந்தேவி எய்திய இன்னல் இத்தகையதென்று இயம்பவும் இயலுமோ! இவ்விருவரது கேண்மையும் பேதையார் கேண்மையன்றே; அருமையாய்க் காண்டற்குரிய ஒத்த பேரறிவுடையார் இருவர் ஒருயிராகக் கலந்ததன்றோ! தாய் தந்தை முதலானோரை இழந் தோர்க்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டி அவர்களது துயரை ஆற்றலாம்; கணவனை இழந்தார்க்கு அங்ஙனங் காட்டு வதில்லன்றோ! ஒவாத விதவை இடும்பை உயிருள்ளவரை ஒழிவ தன்றே! இவற்றை யெல்லாம் நன்குணர்ந்துள்ள பெருந்தேவி ஆற்றொணாத்துன்பத்துள் ஆழ்ந்திருக்குங்கால் அரசனது உரிமைச் சுற்றத்தினர் அவனது திருமேனியைப் பெருஞ் சிறப்புடன் இடு காட்டிற்கெடுத்துச் சென்று ஈமத்தேற்றுவாராயினர். இதனைக் கண்ட பெருந்தேவி சிறிதும் ஆற்றாது அன்புடையாரைப் பிரித லினும் அனலிற் புகுந்து ஆருயிர் துறத்தலே நலம் என்று துணிந்து, தனது உயிர்க்காதலனது ஈமத்தீயிற் பாய்ந்து மாய ஒருப்பட்டனள். அச் சமயத்தில் அங்கிருந்த மதுரைப் பேரால வாயார் முதலான சான்றோர்கள் தம்மை யொத்த பேரறிவுடைய வேந்தனை இழந்ததோடு அத்தகைய பேரறிவு வாய்ந்த அரசியையும்

இழக்க மனம் பொருதவர்களாய் அவ்வம்மையைத் தீப்புகாமல் விரைவில் தடை செய்வாராயினர்.

அதுகண்ட அரசனது பெருந்தேவியும் தீயின்புறத்தே நின்று கொண்டு அச் சான்றோரை நோக்கிப் 'பல சான்றவிரே, பல சான்றவிரே, நின் தலைவனோடிறப்ப நீ போவென்று கூறாது அதனைத் தவிர்கவென்று சொல்லி விலக்கும் பொல்லாத விசாரத்தையுடைய பலசான்றவிரே, அணிலினது வரிபோலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்திடப்பட்ட விதைபோன்ற நல்ல வெள்ளிய நறிய நெய்தீண்டாமல் இலையிடையே பயின்ற கையாற் பிழிந்து கொள்ளப்பட்ட நீர்ச்.சோற்றுத்திரளுடனே வெள்ளிய எள்ளரைத்த விழுதுடனே புளிகூட்டி அடப்பட்ட வேளையிலைவெந்த வேவையுமாகிய இவை உணவாகக் கொண்டு பருக்கைகளாற் படுக்கப்பட்ட படுக்கையின்கண் பாயுமின்றிக்கிடக்கும் கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிருள்ளேம் அல்லேம், யாம்; புறங்காட்டின்கண் உண்டாக்கப்பட்ட கரிய முருட்டால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாவதாகுக; எமக்கு எம்முடைய பெரியதோளையுடையனாகிய கொழுநன் இறந்துபட்டானாக, முகையில்லையாக வளவிய இதழ் மலர்ந்த தாமரையையுடைய நீர் செறிந்த பெரிய பொய்கையும் தீயும் ஒருதன்மைத்து' என்னும் பொருள்கொண்ட* 'பல் சான்றீரே பல்சான்றீரே' என்று தொடங்கும் பாடலைக்கூறித் தீயிற் பாய்ந்து உயிர்துறந்தனள். இதனால் இவ்வம்மை தன் பெருங்கற்பினால் நிகழ்த்திய அருஞ்செயல் வெளியாதல் காண்க.

பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன் :—இவ்வேந்தர் பெருமான் மதுரைமாநகரில் கடைச்சங்க நாளில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்த பாண்டியர்களுள் ஒருவன் ஆவன். இவன் ஆட்சிக்காலத்தில்தான் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்களுள் ஒருவனாகிய கோவலன், தன் மனைவியாகிய கண்ணகியுடன் வாணிகஞ் செய்யக்கருதி மதுரைக்குச் சென்றனன். அவன் அங்கு ஆயர்பாடியிலுள்ள இடைச்சியர் தலைவியாகிய மாதரியின் இல்லத்

* புறம்—246.

தில் தன் மனைவியை இருத்தி, அவளது சிலம்பொன்றை வாங்கிக் கொண்டு, அதனை விற்பதற்கு அகநகர்க்குள் சென்றபோது எதிரில் வந்த அரசாங்கப் பொற்கொல்லனது சூழ்ச்சியினால் கோப் பெருந்தேவியின் சிலம்பு கவர்ந்த கள்வனென்று இப்பாண்டிய னால் கருதப்பட்டுக் காவலாளனால் வெட்டிவீழ்த்தப்பட்டான். இத்துன்பச் செய்தியை யுணர்ந்த கண்ணகி, தன் நாயகனை ஆராயாமல் அநீதியாகக் கொல்வித்த இவ்வரசன்பாற் சென்று தன் வழக்கை எடுத்துரைத்துத் தன் நாயகனாகிய கோவலன் கோப்பெருந்தேவியின் சிலம்புகவர்ந்த கள்வன் அல்லன் என்று மெய்ப்பித்தாள். உண்மையை யுணர்ந்த பாண்டியன் நெடுஞ் செழியன், தான் ஒரு கற்புடை மகளின் கணவனை ஆராயாது கொல்வித்தமைக் குப்பெரிதுங் கவன்று, அத்தீச்செயலை யுன்னி யுன்னி நெஞ்சம் நடுக்குற்றுத் தாழ்ந்த குடையனாய்த் தளர்ந்த செங்கோலனாய்ப் 'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட யானோ அரசன்! யானே கள்வன்! மன்பதை காக்கும் தென் புலங்காவல் என்முதற் பிழைத்தது; என் ஆயுள் கெடுக' என் றுரைத்து அரசுகட்டிலில் மயங்கி வீழ்ந்து உயிர் துறந்தனன். தன் கணவன் இறந்த செய்தியை யறிந்த கோப்பெருந்தேவியும் அத்துன்பத்தை ஆற்றாது சிறிது நேரத்திற்குள் உயிர் நீங்கினள். தான் அறியாது புரிந்த ஒரு பிழைக்காகத் தன் ஆருயிரையே இவ்வரசன் போக்கிக் கொண்டனனெனின், இவனது ஆட்சிக் காலத்தில் குடிமக்கள் எல்லோரும் எத்தகைய இன்னல்களும் எய்தாது இன்புற்று வாழ்ந்திருத்தல் வேண்டுமென்று கூறுவது சிறிதும் புனைந்துரையாகாது.

இப் பாண்டியனுக்கு நேர்ந்த தீவினைத் திறங்களைக் கேட்ட சேரமன்னனாகிய செங்குட்டுவன் பெரிதும் வருந்தித் தன்பால் வந்திருந்த சங்கப் புலவராகிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரை நோக்கி, 'புலவீர், அவன் செங்கோலினின்று தவறிய செய்தி என்னையொத்த அரசர்க்கு எட்டு முன்னர் உயிர்துறந்தது, தீவினை யால் வளைக்கப்பட்டகோலை உடனே செங்கோலாக்கியது ; அரசா யுள்ளார்க்குத் தம் நாட்டில் காலத்தில் மழை பெய்யாதாயின் அச்சம் ; உயிர்கள் தவறிழைக்குமாயின் அச்சம் ; கொடுங் கோற்

கஞ்சிக் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அரசர் குலத்தில் பிறத்தல் துன்பமல்லது தொழுதகவில்லை' என்று மிகவும் இரங்கிக்கூறிய அரிய மொழிகள் ஈண்டு அறிந்துகோடற்கு உரியனவாகும்.

அன்றியும் மதுரைமா நகரம் தீப்பற்றி எரிந்த ஞான்று, கண்ணகி முன்னர்த்தோன்றிய மதுரைமா தெய்வம் நெடுஞ் செழியனது செங்கோற் சிறப்பையும் கோவலனது ஊழ்வினை யுருத்துவந்து தன் பயனை நுகர்வித்ததென்னும் உண்மையினையும் விளக்கிக்கூறிய வரலாற்றைச் சிலப்பதிகாரத்திலுள்ள கட்டுரை காதையில் பரக்கக்காணலாம். இதனாலும் இவனது செங் கோலினது மாண்பு ஒருவாறு இனிது புலனாகும்.

இனி, இவனது செங்கோற் பெருமையோடு ஒருங்கு வைத்துப் புகழ்தற்குரியனவாய் அடுத்து நிற்பன இவனது வீரமும் செந்தமிழ்ப் புலமையுமாகும். இவன் வட நாட்டிலிருந்த ஆரிய மன்னர்களைப் போரிற் புறங்கண்டு புகழெய்தியவன் என்பது,

'வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்குகாணப்
புரைதீர்கற்பிற் றேவிதன்னுடன்
அரசுகட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்'—என்னும் இளங்கோவடிகளது

அருமைத் திருவாக்கினாலும் இவனது இயற்பெயருக்கு முன்னர் அமைந்துள்ள 'ஆரியப்படைதந்த' என்னும் அடைமொழியாலும் நன்கு வெளியாகின்றது.

இவன் கற்றோர்பால் மிக்க மதிப்புடையவன் என்பதும் கல்வி கற்றலையே பெரும் பயனாகக் கருதியவன் என்பதும் இவன் பாடியுள்ள 183-ஆம் புறப்பாட்டினால் அறியப்படுகின்றன. அப் பாடல் அடியில் வருமாறு:—

'உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்

ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன்வருக வென்னு தவருள்
அறிவு டையோனு றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே. *

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் :—ஆரியப் படைந்த நெடுஞ்செழியன் உயிர்துறந்த பின்னர், கொற்கை நகரத்தில் இளவரசாயிருந்து ஆட்சி புரிந்துவந்த வெற்றிவேற் செழியன் என்பான் பாண்டி நாட்டை அரசாளும் உரிமையை எய்தினன். சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் படிமம் அமைத்தற்கு இமயத்தினின்று கல்கொணர வட நாட்டிற்குச் சென்றிருந்தபோது இவ்வரசிளங் குமானுக்கு மதுரைமா நகரில் முடிசூட்டுவிழா நடைபெற்றது. † இவன் முடிசூடிக்கொண்ட பின்னர் நன்மாறன் என்ற வேறு பெயருடையவனுய்த் திகழ்ந்தனன் என்று தெரிகிறது. இவனது ஆட்சிக்காலத்தில் பாண்டி நாடு மழைவளமிழந்து வறுமையுற்றிருந்தது. அவ்வறுமை நீங்கிக் குடிகள் இன்புற்று வாழுமாறு இவ்வேந்தன் கண்ணகியின் பொருட்டுப் பெருவிழா ஒன்று நடாத்தினன். இதனுல் கண்ணகி யின் சினம் தணியவே, நாடு நன்னிலையை எய்திற்று ; குடிகளும் இனிது வாழ்ந்தனர். புறநானூற்றில் (59) இவனைப் பாடியுள்ள

---

* இதன் பொருள் :—தம் ஆசிரியர்க்கு ஓர் ஊறுபாடுற்றவிடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும் மிக்க பொருளைக்கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை வெருதுகற்றல் ஒருவற்கு அழகிது ; அதற்கு என்னே காரண மெனின், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும் ; ஒரு குடியின்கண் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருகவென்னுது அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரசனும் செல்லும் ; வேறுபாடு தெரியப்பட்ட நாற் குலத்துள்ளும் கீழ்க்குலத்தில் ஒருவன் கற்பின் மேற்குலத்துளொருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவனுதலால்.-என்பது.

† சிலப்பதிகாரம்—நீர்ப்படைக்காதை. 127—138.

புலவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்பவரே யாவர். அப் பாடலால் இவனது அருங்குணங்கள் பலவும் வெளியாகின்றன. இவன் சித்திர மாடத்து இறந்தான் போலும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியன்:—இவன் கடைச்சங்க நாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவன். இவனைச் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனது புதல்வன் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவனது தந்தை சின்னாட்களே அரசு செலுத்தியமையின் இவன் இளமையிலேயே அரசு கட்டிலேறல் இன்றியமையாததாயிற்று. இவன் ஆட்சிபுரிந்துவரும் நாட்களில், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் இந்நெடுஞ்செழியனை இளைஞன் என்று இகழ்ந்து கூறிப் பாண்டிநாட்டைக் கைப்பற்றக்கருதி மதுரைமாநகரை முற்றுகையிட்டார்கள். இதனையுணர்ந்த நெடுஞ்செழியன், பெருஞ்சினங் கொண்டு, 'புல்லியவார்த்தைகளைக் கூறிய சினம் பொருந்திய அரசரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே சிதறப்பொருது, முரசத்தோடுகூட அவரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வோராகிய குடிமக்கள், தாங்கள் சென்றடையும் நிழற்காணாதே கொடியன் எம்முடைய வேந்தன் என்று கருதிக் கண்ணீரைப்பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலையுடையேனாகுக; உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய மாங்குடி மருதன் முதல்வனாக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழுந் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக, எனது நிலவெல்லையை, என்னாற்புரக்கப்படுங் கேளிர் துயரம் மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யானுற' என்று வஞ்சினங்கூறிப் போருக்கெழுந்து உழிஞை சூடிப் போர்புரியத் தொடங்கினன். இவன், மிக்க இளைஞனாயினும் சிறிதும் அஞ்சாமல் கடும்போர் புரிந்து அன்னவர் எழுவரும் புறங்காட்டியோடச் செய்தனன். தோல்வியுற்ற எழுவரும் ஓடிச்சென்று சோழநாட்டிற் புகும்போதும் நெடுஞ்செழியன் அவர்களைவிடாது

பின் தொடர்ந்துசென்று தலையாலங்கானத்து மறித்துப்பெரும் போர் நடத்தி வாகைமிலேந்தனன். (புறம்—19, 23.) இவன், இதனோடு நில்லாமல் பகைஞர்களை அவர்களது உறையூர், வஞ்சி முதலான நகரங்கள் வரையில் போர்ப்பறை யொலிப்பத் துரத்திச் சென்று அன்னோரது உரிமைமகளிர் நாணமுற்று உயிர்துறக்கு மாறு அவர்களைக் கொன்றனன். (புறம்—78) வேள் எவ்வி முன்னர் ஆட்சிபுரிந்ததும் இருங்கோவேண்மானுக்குரியதுமாகிய மிழலைக் கூற்றத்தையும் அதற்கடுத்துள்ளதும் வேளிர்களுக் குரி யதுமாகிய முத்தூர்க் கூற்றத்தையும் இப்போரின் இறுதியில் கைப்பற்றிக்கொண்டு பாண்டி நாட்டோடு சேர்த்துக் கொண் டான். (புறம்—24) இப்போர் நிகழுங்கால், இவன் மிகவும் இளைஞனாயிருந்தனன் என்பது, 'சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக்கழலினைச் செறித்துக் குடுமியொழிக்கப்பட்ட சென் னிக்கண்ணே வேம்பினது ஒள்ளியதளிரை நெடிய கொடியாகிய உழிஞைக் கொடியோடு சூடிக் குறியவளைகளை யொழிக்கப்பட்ட கையின்கண்ணே வில்லைப் பிடித்து நெடிய தேரினது மொட்டுப் பொலிவுபெற நின்றவன் யாரோதான்? யாரேயாயினும், அவன் கண்ணி வாழ்வதாக; தாரையணிந்து ஐம்படைத்தாலி கழித்தது மிலன்; பாலையொழித்து உணவும் இன்றுண்டான்; முறை முறையாக வெகுண்டு மேல்வந்த புதிய வீரரை மதித்ததும் அவ மதித்ததும் இலன்; அவரை யிறுகப்பிடித்துப் பரந்த ஆகாயத்தின் கண்ணே ஒலியெழக்கவிழ்ந்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந் தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும் இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்' என்னும் பொருள் கொண்ட 'கிண்கிணி களைந்தகால்' என்று தொடங்கும் இடைக் குன்றூர் கிழாரது பாடலால் தெளிவாகப் புலப்படுகின்றது. (புறம்—77)

இவ்வேந்தன், இராவிற் பாசறையின்கண் போரிற் புண்பட்ட வீரர்களைப் படைத்தலைவன் முன்னே காட்டிச்செல்ல துயில் சிறிதுமின்றித் தானே அவர்களை நேரிற்கண்டு அன்புடன் இன் சொற் கூறிப் பாராட்டுவது வழக்கம் என்பது 'வேப்பந்தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலோடே முன்

செல்கின்ற சேனபதி புண்பட்ட வீரரை அடைவே அடைவே காட்ட.................செருக்கின குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே வீசுந் துளிகளை யுதற, இடத்தோளினின் றும் நழுவி வீழ்ந்த அழகினையுடைய ஒலியலை இடப்பக்கத்தே யணைத்துக்கொண்டு, வாளைத்தோளிலே கோத்ததறுகண்மையை யுடைய வாளெடுப்பான் தோளிலே வைத்த வலக்கையை யுடைய வனய்ப் புண்பட்ட வீரர்க்கு அகமலர்ச்சிதோன்ற முகம்பொருந்தி, நூலாலே சட்டத்தைக்கட்டின முத்தமாலையை யுடைய கொற்றக் குடை தவ்வென்னும் ஓசைபட்டு அசைந்து பாக்கின்ற துளியைக் காக்க நள்ளென்னும் ஓசையையுடைய நடுயாமத்துப் பள்ளி கொள்ளானய்ச் சில வீரரோடு புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச் செய்யும் அரசன்' என்று பொருள்படும் 'வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு' என்னும் நெடுநல்வாடைப்பாடற் பகுதியால் நன்கறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் பெருவீரனகிய இந்நெடுஞ்செழியன், தான் ஒருவனக நின்று பேரரசர் இருவரையும் சிற்றரசர் ஐவரையும் தலையாலங்கானத்து வென்ற செய்தி இராசசிங்க பாண்டியனது சின்னமனூர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பெற்றுளது. (Madras G. O. No. 503 Public Dated 27—6—07.)

இனி, 'நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்' என்ற 72 ஆம் புறப் பாட்டினல், இம்மன்னன் கற்றுத்துறை போய காவலன் என்பதும் கற்றோர்பால் பேரன்பும் பெருமதிப்பும் உடையவன் என்பதும் நன்கு விளங்குகின்றன. இவன் புலவர் பெருமக்களிடத்து, எத்தகைய மதிப்பு வைத்திருந்தனன் என்பது,

'ஓங்கியசிறப்பி னுயர்ந்தகேள்வி
மாங்குடிமருதன் றலைவனக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடா துவரைகவென் னிலவரை'

என்னும் புறப்பாட்டடிகளில் இவன் கூறியுள்ள உயர் மொழிகளால் ஒருவாறு புலப்படும்.

பத்துப்பாட்டிலுள்ள மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் இவ்வேந்தன் மீது பாடப்பட்ட நூல்களே யாகும். இவ்வரிய நூல்களைப்பாடிய புலவர்பெருமக்கள் முறையே மாங்குடி மருதனாரும் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாருமே யாவர்.

நம் நெடுஞ்செழியன் போர் விருப்பு மிக்குடையவனாய்,

'ஒளிறிலைய வெஃகேந்தி
அரசுபட வமருழக்கி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம்வேட்டு' வாணாட்களைக் கழித்து வந்தமையின்,

இவனது அவைக்களப் புலவர்தலைவராகிய மாங்குடி மருதனார் என்பார் வீடடைதற் கேதுவான அறநெறியைக் கைப்பிடித் தொழுகுமாறு இவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தக் கருதியே 'மதுரைக் காஞ்சி' என்றதோர் அரிய நூலை இயற்றியுள்ளார். இந்நூலால் இவனது முன்னோரது பெருமையும் இவனது செங்கோற் சிறப்பும் வீரமும் பாண்டி நாட்டின் வளமும், மதுரைமா நகரின் வனப்பும் பிறவும் இனிது உணரப்படும். இஃது எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளை யுடையது.

'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந'—என்னும்

மதுரைக் காஞ்சியடிகளில் பாண்டியராக மதுரையில் வீற்றிருந்து அரசாண்ட சோமசுந்தரக் கடவுளின் வழியில் தோன்றியவன் இந் நெடுஞ்செழியன் என்று மாங்குடி மருதனார் குறித்திருப்பது ஈண்டு அறியத்தக்கது.

தொடரும்.

# பதிபசு பாசப் பனுவல்.

## முதலாவது
## பிரமாண வியல்.

திருவாளர், L. உலகநாத பிள்ளையவர்கள், தமிழாசிரியர்,
நாட்டுமொழிக்கல்லூரி, திருவையாறு.

சொல்வாம் பிரமாண மேயஞ் சுருதியுஞ்சொ
னன்மிதி மாதிருவு நாடு. (க)

சமலன்சிச் சத்திதிரி வையமறின் மான
மமலன ணுப் பாசமு மேயம். (உ)

மிதிமான முன்பெற்ற மேயம்பின் பெற்ற
மதிமான மாதிருவான் மா. (௩)

ஒன்றனைமற் றொன்றென் றுணர்கை திரிவைய
மொன்றினிரட் டுற்ற வுணர்வு. (௪)

அனுபூத வாதனையா லாகு மிருதி
யதுதானு மல்லவிமா னம். (ரு)

உன்முகமா னங்காணத் தோடுயிரம் மானத்தோ
டுன்முகமாய் வேறற் றுறும். (சு)

காண்டலனு மானமுரை யொப்பொழிவ பாவமுமென்
றீண்டிருமூன் றுமான மெண். (எ)

அந்தக் காணம் புறக்கரண மென்றிவற்றைப்
பந்தித் திலங்குமிவை பார். (அ)

அவ்வியாத்தி தோடமிலை யத்தியக்க மாதியெலா
மிவ்விலக்க ணம்பெறலா லே. (கூ)

அதிவியாத்தி யில்லைப் பதிபசுபா சார்த்தத்
திதுமீண் டிடுதலினா லே. (க0)

அசம்பவமு மல்லவிமா னத்தறியப் பட்டே
துயங்கினர்மா னத்துண்டோ சொல். (கக)

சிவமானஞ் சைவநூல் செப்புயிர்சிற் சத்தி
யவமான மற்றையமா னம். (கஉ)

மானம் பிரமிதிக்குச் சாதனமென் றேமதித்தார்க்
கூனமுரைத் தீண்டுணர்த்து வோம். (கரு)

தீபாதி யும்மிதியைச் செய்பு மவைமெய்யே
தீபாதி மானமோ செப்பு. (கச)

இந்திரிய மந்தக் கரண மிவையுமல
வந்திடுந்தோ டங்காட்டு வாம். (கடு)

கண் ணுருவங் கா ணு மதன்விடையங் கந்தமுமன்
றுண்மனம்பற் றுந்துணியு மோ. (கசு)

அத்தமுரு மூன்றினையுந் தானிவற்று லாய்தலினுற்
சிச்சத்தி மானமெனத் தேறு. (கஎ)

மறைந்துமலத் திற்காணம் வாய்த்திடலு மத்த
மறிந்திடுங்கா லங்காண்ட லாம். (கஅ)

அவ்விகற்பஞ் சவ்விகற்ப மென்றிரண்டா மக்காட்சி
யிவ்விகற்பங் காட்டுவம்பா ரீண்டு. (ககூ)

அவ்விகற்ப மத்தமுள தென்றறிகை பின்பறிகை
சவ்விகற்ப நாமாதி சார்ந்து. (உ0)

இந்திரிய மானதமே யின்பெழுவா யோகமுமென்
றிந்தவித மீரிரண்டுண் டுண்டு. (உக)

அவ்விகற்ப மிந்திரியக் காட்சியென வாய்ந்தறியாய்
சவ்விகற்ப மானதமே தான். (உஉ)

வேதனைதா னின்பத்துன் பத்தின் விளக்கமதன்
சாதனமே வித்தையது தான் (உரு)

ஒடுங்கப் புலன்கண் மலமு மொதுங்க
வடங்கலுந்தோன் றும்யோகத் தால். (உச)

இந்திரிய மத்தத் திணங்கும் பொழுதாறு
பந்தமுறும் பாரறிவிப் பாம். (உடு)

இந்திரிய மத்தத் திணங்குதலே சையோக
மந்தப் பொருளுண்மை யாம். (௨௬)

சாதிகுணந் தன்னிற்சை யோகசம வாயமாம்
போதமுணர் தாங்கா ணும் போது. (௨௭)

சய்யுத்த வேத சமவாய சம்பந்த
மெய்துங் குணத்துவத்தி லே. (௨௮)

சத்தஞ் சமவேதத் தாலே செவிப்புலத்துக்
கத்தமா மென்றே யறி. (௨௯)

சத்தத்திற் சாமா னியத்தைத் தருமதனில்
வைத்தசம வேதசம வாய். (௩௦)

தவாசம வாயசம் பந்தந் தருங்காண்
பாவ விசேடணத்து வம். (௩௧)

ஏதுவினு லேதுமான் றன்னையுயிர்க் கெண் ணுவிக்கும்
போதமனு மானமதன் பூண். (௩௨)

அவ்விரண்டின் சம்பந்தங் காட்சியினுன் முன்னறிந்தே
யிவ்வனுமா னந்தோன்றி டும். (௩௩)

சாத்தியமில் லாவிடத்துச் சாதனமு மில்லையெனப்
பார்க்கவெதி ரேகியிரு பால். (௩௪)

இந்தவனு மான மெணிற்றிருட்டா திட்டமெனு
மிந்தவிதப் பட்டிரண்டா மீங்கு. (௩௫)

புறக்கரணத் தந்தந் திருட்டம் பொறியி
னகக்கரணத் தந்தம திட்டம். (௩௬)

சாமானி யத்தும் விசேடத்துஞ் சார்ந்திடநான்
காமோரி ரண்டுமறி யாய்ந்து. (௩௭)

தன்னனுமா னம்பார்வாய்த் தான்கெட்ட லென்றிரண்டா
மின்னவிரண் டும்மறிவிப் போம். (௩௮)

கண்டுபுகை யாதி யனலா வியைக்கருதிக்
கொண்டிடுதன் முந்தியதா கும். (௩௯)

மற்றையனு மானமல மோசகனே தும்மேதுப்
பெற்றிலங்கும் போதமெனப் பேணு. (௪௦)

பக்கமுதன் மூன்றுமுறுப் பைந்தும் [பாரபகவர்?]
தக்கோர் பிறர்தெளியத் தாம். (சக)

பக்கம் பொருட்கிடமுன் பார்த்த விடஞ்சபக்க
மிக்கவிட மீளுமிட மே. (சஉ)

உண்டென்று பக்கத் துணர்த்தும் பொருளேதுக்
கண்டுரைப்ப மோர்ப்பிசைவுங் காண். (சங)

அன்னுவயி மற்றைவெதி ரேகி யவையிரண்டு
மென்னவித மூன்ருகு மேது. (சச)

காரியவே துக்கா ரணவேதுத் தன்மமு மென்
றேருறமூன் ருகுமுறை யெண். (சரு)

உரையின்னு மானத்து முண்டனுமா னங்கள்
விரியுமினும் பாரிவ் விதம். (சசு)

ஐந்துருவுண் டன்னு வயவெதிரே கிக்கயலுக்
கொந்தொந்து குன்றுமுறை யுற்று. (சஎ)

பக்க சபக்கத்திற் பற்றல் விடல்விபக்க
மற்றென்றின் வாதையிலா மை. (சஅ)

அசற்பிரதி பக்கமுமென் றைந்துருவு மாய்க
விசைப்பா மெதிரிவற்றுக் கெண். (சகூ)

அவமான வேதுக்க ளைந்துண் டசித்த
முதலிவற்றை யெல்லா முனி. (ருo)

பக்கத் தபாவம் சித்த விபரீத
பக்கத்து மாம்விருத்தம் பார். (ருக)

அசித்தம் விசேடணத்து மாகி லதுவு
நிசித்த மெனவே நினை. (ருஉ)

அனைகாந் திகஞ்சபக்கத் தாற்றுமுத லாகும்
பினையொன்று மூன்றும் பெறும். (ருங)

மற்றையொரு சாதனத்தின் வாய்க்கப் பொருளதனை
யற்றதனை காந்திகம்வீ றற்று. (ருச)

காலாத்தி யாபதிட்டங் காட்சிமுதன் மூன்றினுக்கு
மேலாப் பொருட்கிணங்கு மேது. (ருரு)

சாத்தியமுஞ் சாதனமுந் தம்மில்விப ரீதமறச்
சாத்தியமில் லாதசபக் கம். (ருசு)

காணசமஞ் சற்பிரதி பக்க மெனக்காண்க
வாணலவிவ் வைந்தும் வரம். (ருஎ)

அற்றிடினே யிந்த வவாவித மோரைந்து
முற்றிடுமைந் தென்னுமுரு வோர். (ருஅ)

நேரியவுந் தூரியவு நேருநிம லேசனரு
ளாரியத்தின் போதமுறை யாம். (ருகூ)

இல்லா னனுதிமல மீசனறிந் தேயிசைப்ப
னெல்லா மிருந்தபடி யே. (சுO)

அவனமலன் காட்சியனு மானப் பொருளுஞ்
சிவன்றனிய லாற்றெருட்டுந் தேசு. (சுக)

கணித்தது மந்திரத்துங் காணக் கசடின்மை
யெணுகவிவை போன்மற்றெ லாம். (சுஉ)

கண்ணன் கருமுகில்போல் வண்ணனெனக் கேட்டவனைக்
கண்ணுமுணர் வொப்பெனவே காண். (சுஙு)

நின்மலன்சொன் மேலெனலு நீசஞ் சமலரிய
லென்னுந் துணிவொழிபென் றெண். (சுச)

ஒன்றனைமற் றென்றென் றுருவிப்பி னுண்மையினே
டொன்றெணம்(?) பாவமென வோர். (சுரு)

ஆகுபெய ரிப்பெயர பாவத் துணர்ச்சிப்பின்
னாதலினு லுண்மையடைந் து. (சுசு)

இன்னுமியல் புண்மைபொரு ளைதீக மென்றியலுட்
பன்னுதலு முன்னடக்கிப் பார். (சுஎ)

உரைப்பாரு மிந்த வியலுரைப்பிப் பாரும்
வரைப்பாரும் பெற்றார் வரம். (சுஅ)

பிரமாணவியன் முற்றும்.

# கண்ணகியும் மாதவியும்.

திரு. இராம. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், கரந்தை.

இற்றைக்கு 1800 யாண்டுகட்டுமுன் தமிழ்த்தாயின் தவச் சேயாய்ச் சேரர்மரபில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மகவாய்த் தோன்றித் துறவொழுக்கத்திற் றலைசிறந்து விளங்கிய பெரியாராகிய "இளங்கோவடிகள்," அக்காலத்தே புகார்நகரில் வாழ்ந்த ஒரு பெருங்குடி வணிகன் மகனாகிய கோவல னென்னு மிளைஞன், கண்ணகி மாதவி என்னும் இருமகளிரோடு வாழ்ந்த வாழ்க்கை முறையினையும், அதனாலவர்களுற்ற பயன்களை யும், இயல், இசை, நாடகம் என்னும் தமிழ் முச்சுவையும் ஒருங்கே தோன்றும் ஓர் அருந்தமிழ் நூலாக இயற்றி அதற்குச் சிலப்பதிகாரமெனப் பெயர்தந்து மன்பதைக்குதவியுள்ளார். இச் சிலப்பதிகாரத்திற்காணும் கண்ணகி, மாதவி ஆகிய இவ்விரு மகளிரின் வயது, வனப்பு, கற்பின் திறன், இல்வாழ்க்கை, இயற்கைக் குணங்கள், இக்காதை நிகழ்ந்த காலத்தே மக்களிடை யில் பரவியிருந்த மணவழக்கங்களாகிய இவைகளை ஒப்புநோக்கி இவ்விருமகளிரும் கோவலன் மனைவியரென்னும் ஒரேபடித்தான உரிமையினரா, அன்றி ஒரு சாராரின் கொள்கைபோன்று ஏற்றத் தாழ்வுடையரோ என்னும் கூற்றினை ஒருவாறு ஆராய்ந்து கண்ட பொருள்களே இங்குக் கூறப்பெறுகின்றன.

புலவர்பாடும் புகழுமைந்த புகார்நகரத்தில் வாழ்ந்துவந்த பெருங்குடி வணிகனான மாநாய்கனென்பானின் திருமகள பன் னிரண்டாட்டைப் பிராயத்தினளாய், கண்ணகி என்னும் பெயர் பெற்று விளங்கினாள். அம்மங்கை அழகின் சிறப்பினையும் கற்பின் திறத்தினையும் கண்ட மற்றைய மாதர்கள், இவள் வானவல்லி போன்றவள், போதிற் பொருந்திய திருமகளின் வடிவு இவள்

வடிவை யொக்குமென்றும், ஒப்பற்ற அழகும் உயரிய கற்பு முடையாள் எனக்கூறியும் போற்றிப் புகழ்வர். அந்நகரத்திலே செல்வம் மிகப்பெற்ற மாசாத்துவான் என்னும் மற்றொரு பெருங் குடி வணிகனிருந்தான். அவ்வணிகனுக்குச் செவ்வேள்போன்ற இளமையும் செம்மையும் வாய்ந்த கோவலனென்னும் ஓர் மக னிருந்தான். இவ்விருவரது பெற்றோரும் ஒரு நன்னாளில் கோவ லனுக்குக் கண்ணகியை மணஞ்செய்வித்து மனங்களிக்க எண்ணி மதியம் சகடணைந்த நாளில் மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து நீலவிதானத்து நித்திலப்பூம்பந்தர்க்கீழ் சாலியொருமீன் றகையாளை, மாமுதுபார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலஞ் செய்வித்து மணமுடித்தனர். மணக்கோலங் காண நிறைந்து நின்ற மாதர்கள் கண்ணகியும் அவள் காதலனும் மணியும் ஒளியும் போலவும் மலரும் மணமும் போலவும் ஒருவரை ஒருவர் பிரியாமல் வாழ்க என்று வாழ்த்தி நறுமலர் தூவினார்கள். நறுமணங்கமழும் மலர்களின் நலத்தினை உண்டு மகிழ்ந்த வண்டுகள் எங்கும் ஓடிச் சுழன்று இன்புற்றிருந்தன. இளவேனிற்காலத்தில் வீசிய இளந்தென்றல், மலர்களின் மெல்லிய மணத்தைத் தாங்கி எங்கும் பரந்து வீசி இன்பம் பயந்தது. காதலர் இருவரும் அணிபெற வகுத்த மணிநிலாமுற்றத்தில் இனிதிருந்து அம்மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றின் நலத்தினை நுகர்ந்து இன்புற்றிருந் தார்கள். மலரின் மணமும், மாலை மதியமும், வீசுதென்றலும், காதலர் மனத்தைப் பெரிதும் மகிழ்வித்தன. இவ்வாறு இன்புற் றிருக்கையில் கோவலன் தன் காதலியின் குலத்தையும் நலத்தை யும் பலவாறாகப் புகழ்ந்துரைத்தான். தன்காதலியின் அழகையும் அவள் முடிமுதல் அடிவரை அணிந்திருந்த அணிகளையும் குழலிற் சூடியிருந்த நாறு மலர்மாலையையும் பார்த்து, என் கண்மணி அனை யாளே! இயற்கையழகு அமைந்த உனக்கு என் இவ்வாறு செயற்கையழகு செய்தார்கள்! என்று வருந்துவான்போல் மகிழ்ந்து கூறிக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த நலங்கள்யாவும் தோன்ற இன்பம் நுகர்ந்து களித்துவாழும் நாளில் கோவலன் நற்றாய், தன்மகனும் மருகியும் இல்லறத்தை இனிது நடத்தி அறவோர்க்களித்தல் அந்தணர் ஓம்புதல், துறவோர்க்

கெதிர்தல், ஆகிய நல்லறங்களை நடத்தி வாழ்வதைக் காணும் விருப்புடையளாய் இருவரையும் தனியாக ஒரு மாளிகையில் வாழ்ந்துவரச் செய்தாள். இவ்வாறு இல்லறத்தை இருவரும் சில ஆண்டுகள் இனிது நடத்தி வந்தனர். தெய்வத்தன்மையை யுடைய பெரிய பொதியமலைக்கட் டிருமுனியாகிய அகத்தியன் முன்பாலிட்ட சாபத்தால் இந்திரச் சிறுவனோடே அம்முனி யருளத் தலைக்கோற் றனத்து நீங்கிய மாறுபடுதலரிய குறைவற்ற நாடகத்தொழிலொடு பொருந்திய உருப்பசியாகிய அம் மாதவி மரபினளும், பிறப்பிற் குன்றுதலில்லாத பெரிய தோளினையும், தாதுகள் விழும் பூக்களையுடைய கடைகுழன்று சுருண்ட குழலினை யும், குற்றமில்லாத வனப்பையுமுடைய மேனியையும் உடையளாய் ஆடல், பாடல், அழகுகளில் ஒன்றும் குறைவுபடாத மாதவி யென்பாள் பன்னிரண்டாட்டைப் பிராயத்தினள் புகார் நகரில் சித்திராபதி யென்னும் நாடகக் கணிகையின் திருமகளாய் விளங்கினள். இம்மாதவி வீரக் கழலணிந்த கரிகாற் பெருவளத் தானது அவையில் தன் ஆடலையும் பாடலையும் முறைப்படி அரங்கேற்றச் சென்றனள். அவ்வவையில் அரசர், வணிகர் முதலிய சிறப்புவாய்ந்த மக்களெல்லாம் தம்தம் பெருமைக்கும் முறைமைக்கும் ஏற்ற முறையில் வரிசை வரிசையாக அமர்ந்திருந் தார்கள். கோவலனும் அங்குச்சென்று தன் குலத்திற்கும் செல்வத்திற்கும் ஏற்ற இடத்தில் அமர்ந்திருந்தான். அங்கு இருவகைக் கூத்தின் இயலமைந்த ஆடலாசிரியனும், யாழும் குழலும் தாளமும் பாடலும் வல்லவனாகிய இசையாசிரியனும் விளங்கித் தோன்றினர்கள். அவ்வரங்கில் பூங்கொம்பு போன்ற மாதவி தோன்றி வலது காலை முன்னேவைத்து நாட்டில் நன்மை பெருகவும் தீமை யகலவும் வேண்டித் தெய்வப்பாடல் பாடிய பொழுது, குழலின்வழியே யாழ் நின்றது, யாழின் வழியே மத்தளம் நின்றது. இவ்வாறு இசைக் கருவிகளெல்லாம் பருந்தும் நிழலும் போல ஒன்றாய் ஒலிப்பச் சபையில் பாட்டும் கூத்தும் நிகழ்ந்தன. இவைகளைக்கண்டு வியந்த அரசன் மாதவிக்கு ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னும் பச்சைமாலை யொன்றும் பரிசாகக் கொடுத்தனன். அரசனிடம் பெற்ற பச்சை மாலையை

மாதவி தன் தோழி கையில் தந்து இதற்குரிய மாற்றுயர்ந்த அரியபசும் பொன்னைத் தந்து வாங்குவோன் என் காதலனாக அமைவன் எனச் சொன்னாள். தோழி மாலையைக்கொண்டு வீதியிற் சென்றனள். மாதவியின் ஆடல், பாடல், அழகு முதலியவற்றை அரசனது அரங்கிற்கண்டு அவள் திருவுருவத்தைத் தன் உள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்து ஏங்கியிருக்கும் கோவலன் பெறுதற்கரிய தொரு அமயம் வாய்த்ததெனக் கருதி மாதவியின் மாலையைப் பொன் கொடுத்துவாங்கித் தோழியுடனே அவள் மனைசென்று மாதவியை மணந்து மகிழ்ந்திருந்தனன். மாதவி மனையில் மல்லிகை முல்லை முதலிய மலர்கள் மணங் கமழ்ந்தன. மாலைப் பொழுதில் மந்தமாருதம் மெல்லெலன வீசியது. கதிரவன் மறையவே குளிர்ந்த கிரணங்களையுடைய திங்கள் விண்ணிலே விளங்கித்தோன்றிற்று. தென்றலும் நிலவும் காதலர்க்கு அளவற்ற இன்பமளித்தன. இத்தகைய மாலைப் பொழுதில் மாதவி தன் காதலனுக்குக் கலவியும் புலவியும் ஈந்து ஆர்வ நெஞ்சமொடு இன்புற்றிருந்தனள். இவற்றை இதுவரை நிறுத்தி, கண்ணகி, மாதவி இவர்களின் மணம், வனப்பு, மாபு, இல்வாழ்க்கை இவைகளைக் கூறுவாம்.

1. **மணம்.** நம் இந்திய நாட்டில் காதல் மணங்களையே தொன்றுதொட்டு மக்கள் கையாண்டு வந்திருக்கின்றனர் என்பதை அக்காலத்து அகப்பொருள் இலக்கணங்கள் நன்கு விளக்கிக் காட்டுகின்றன. ஆனால் பிற்றைக்காலத்தே மக்களின் தொகையும் தொழில் வேற்றுமையும் சாதி வேற்றுமையும் மிகப் பலவாகவே மணங்களிலும் மாறுதல்கள் பலவாயின. இதை யொட்டி நடந்த மணங்களும் பலவகைப்பட்டன. பண்டு 'இம் மச்சப்பொறியை எய்தவன் இக் கட்டழகியின் கணவனாவான்; இவ்வலியுடை வில்லை வளைத்தவன் இவ்வழகிய மங்கையின் கணவனாவான்; இவ்வளவிய இளைய ஏற்றைத்தழுவி ஏறிச்செலுத்தினானுக்கு இம்முல்லைப் பூங்குழலாள்' என்னும் வகையில் மணங்கள் நடந்தன. இவை நிற்க, அரசமகளிர் தாமே மணமகனைத் தேர்ந்து மணந்துகொள்ளும் வழக்கமுடையாராக இருந்திருக்கின்றனர்.

இந்நாள் நம்மக்கள் இம்முறைகள் யாவையும் ஒப்பு நோக்கி இவைகளனைத்திலும் நன்மை அதிகமுடைத்தென்றோ மற்று யாது காரணம் பற்றியோ தாய் தந்தையரால் மணம்பேசி இணைத்து வைக்கப்பெறும் மணங்களை வழக்கத்தில் கொண்டு வந்திருக்கின்றனர். இக்காதை நிகழ்ந்த காலத்தேயே இவ்விதப் புதிய மணமுறைகள் மக்களிடையே பரவத்தொடங்கக் காதல் மணங்கள் முற்றும் வழக்கத்தினின்றும் ஒழிந்துவிடாதிருந்தன. எனவே, மேற்கூறிய மணங்களில் கண்ணகியின் மணம் பெற்றோரால் மணம் பேசி, மணச் சடங்குகளியற்றி ஒன்று சேர்த்த மணமாகும். மாதவியின் மணமோ வெனின், ஒருவரையொருவர் தாமே காதலித்துத் தேர்ந்த காதல் மணமாக நிகழ்ந்திருக்கின்றது. இவ்வகையால் மாதவி தனக்குத் தக்க கணவனைப் பண்டை வழக்கையொட்டித் தேர்ந்தெடுத்துக் கொண்டனள். மணமென்னும் திப்பியசொல்லின் பொருள், ஓர் ஆண்மகனும் ஓர் பெண்மணியும் ஒத்தமனத்தினராய்க் கணவனும் மனைவியுமாக வாழவேண்டி முதன் முதலாகச் செய்துகொள்ளும் உறுதி என்பதன்றோ. இது காலமென்னும் யாற்றால் ஈர்க்கப்பெற்று மக்களின் மனப்பான்மைக் கேற்றவாறு ஆங்காங்கே பலப்பல மாறுதல்களடைந்தது. இது அரும்பு, மலர், காய், கனி என்பன போன்ற மக்களின் பல பக்குவ காலங்களை உணர்த்துவதே. காலத்தின் மாறுதலுக்கேற்றவாறு மக்களின் மணவழக்கங்களும் மாறிக்கொண்டே வந்தவழி பழைய மணவழக்கத்தை யொழித்துப் புதிய மணவழக்கத்தைக் கைக்கொள்ள முயலும் இடைக்காலத்தே கோவலன் ஒருவர் பின் ஒருவராய் இருமகளிரை மணந்தனன். இவைகளில் முன்னது பெற்றோராற் சேர்க்கப்பெறுவதான புதிய முறையை யொட்டிய மணமாகவும், பின்னது பழையமுறையை யொட்டிய காதல் மணமாகவும் நிகழ்ந்தன. "மாமலர் நெடுங் கண்மாதவி மாலைவாங்கிக் கூனிதன்னொடு மணமனைபுக்கு" என்பதால் மாதவி மனையில் மணத்திற்கான குறிகள் இருந்தனவெனப் புலனாகின்றமையின், மாலைபெற்ற கோவலன் மாதவிவீடு சேர்ந்ததும் அவ்விருவருக்கும் மணநிகழ்ந்ததெனவே கொள்ளக் கிடக்கின்றதன்றோ?

வயது. கண்ணகியைக் கோவலன் மணந்த காலத்து அவள் பன்னிரண்டாண்டினள் என்பது "ஈராறுண்டகவையாள்" என மங்கல வாழ்த்துப் பாடலில் காணக்கிடக்கின்றது. மாதவி அரங்கேறிய காலம் "ஏழாண் டியற்றியோ ரீரா றுண்டிற் சூழ்கழன் மன்னற் காட்ட வேண்டி" எனப் பின்வரும் அரங் கேற்று காதையில் காண்கின்றது. மற்றும் மனையறம் படைத்த காதையில் "யாண்டுசில கழிந்தன விற்பெருங் கிழமையிற் காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்" கென ஆசிரியர்கூறிப்போந்தாராதலால், கண்ணகியோடு ஒரு சில யாண்டுகள் வாழ்ந்த பின்னரே மாதவி யைக் கோவலன் மணந்தனன். அவ்வாறு மணந்த காலத்து மாதவிக்குப் பன்னிரண்டாண்டாதலின் கண்ணகியிலும் மாதவி சில யாண்டுகள் வயதில் இளையவளென்னக் கொள்ளல் வேண்டும்.

வனப்பு. போதிற் பொருந்திய திருமகளுடைய வடிவு இவள் வடிவையொக்கும். பழுதில்லாத அருந்ததியின் புகழை யுடைய கற்பு இவள் கற்பையொக்கு மென்று உலகின் மாதரார் தன்னைத் தொழுதேத்தும்படி பெருங் குணங்களைக் காதலிப்பாள் கண்ணகி என்பது இவள் பெயராகுமென்றும்; மாறுபடுதலறியாக் குறைவற்ற நாடகத் தொழிலொடு பொருந்திய உருப்பசியாகிய அம்மாதவி மரபில் பிறப்பிற் குன்றுதலில்லாத, பெரிய தோளினை யும் தாதுகள்விழும் பூக்களையுடைய கடைகுழன்று சுருண்ட குழலினையும் குற்றமில்லாத வனப்பையுடைய மேனியையும், ஆடல், பாடல், அழகு இம்மூன்றில் ஒன்றும் குறைவுபடாத மாதவி என்பாளென்றும் நூலிற் காண்பதால் இவ்விருமகளிரும் வனப்பில் எற்றத் தாழ்விலர் என்றே கூறிவிடலாம்.

இல்வாழ்க்கை. மனையறம் படைத்த காதையில் கண்ணகி யோடு கோவலன், அறவோர்க்களித்தல், அந்தணரோம்புதல், துறவோர்க்கெதிர்தல் ஆகிய இல்லறமுறை யாவையும் வழுவாது நடத்தியதாகக்கூறி, மாதவியோடு கோவலன் வாழ்ந்த காலத்தை அளவற்ற இன்பநுகர்ந்த காலமாக மாத்திரம் அந்திமாலைச்சிறப்புச் செய் காதையில் ஆசிரியர்கூறிப்போந்தாரெனினும் பின்னேகாணும்

அடைக்கலக் காதையில் மாதவி மணிமேகலையைப் பெற்றகாலத்து கோவலன் "மங்கலமடந்தை மாதவிதன்னெடு செம்பொன்மாரிச் செங்கையிற்பொழிய" என அவன் செய்த அளவற்ற புண்ணிய தானங்கண்டு அந்நன்னாளில் தானங்கொள்ளுதற்கு வந்த ஓர் மறையோனை மதவேகத்தையுடைய யானை ஒன்று கைக்கொள்ள, அக்கணத்திலேயே கோவலன் சென்று மறையோனை யானையிட மிருந்து நீக்கி அதன் மத்தகத்தேறி அக்களிற்றின் மிகச்சினத்தை அடக்கிய வீரனென்றும், மற்றும் ஓர் பார்ப்பினி தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாக ஒரு பாம்பணுக அதைக் கௌவித்துணித்த குருதிவாயொடு தன் வரவு பார்த்து எதிர் கொண்டதனைத் தன் பிள்ளையைக் கடித்ததெனக் கருதித் தன் கையின் மணையாற் புடைக்க அது மரித்தலாலே அவள் கணவன் கொலைப்பழி கொண்டாளொடு இனி மனையறத்தின்கண் வாழும் வாழ்க்கை மேவக் கடவதன்று எனப் பிரிந்து சென்றிட வருந்திய அப்பார்ப்பனியின் துன்பம் பொருகாணுய் நூல்வழியே அப் பார்ப்பினிக்குளதாகிய கொலைப்பாவ நீங்குவதற்குத் தானத்தையும் செய்து அவள் துன்ப நீக்கிக் காட்டுநெறி கட் போன கணவனை யும் கூட்டி அவர்க்கு மேலுள்ள காலத்திற்குத் தளராத பலபடைப் பாகிய செல்வத்தோடே மிக்க கைப்பொருளுங்கூடக் கொடுத்து வேள்வியையும் செய்வித்த தொலையாத செல்வன் என்றும், மற்றும் பல அரியசெயல்களையும் பாடல மறையோன் வாயிலாக ஆசிரியர் பெருமைபடுத்திக் கூறுகின்றார். இவையனைத்தும் கோவலன் மாதவியோடு வாழ்ந்த காலத்திலியற்றிய நல்லறங்களே யாகும் எனின் கோவலனும் மாதவியும் இல்லற முறை ஒரு சிறிதும் குன்றாது வாழ்ந்திருதனர் எனப் புலனாகின்றதன்றோ! அன்றியும் இல்வாழ்வான் பெறும் பேற்றில் மகப்பேறும் ஒன்றன்றோ! இவ்வரிய மகப்பேற்றைக் கோவலனெய்தியது மாதவியோடு வாழ்ந்த காலத்தே யன்றோ! மாதவி பயந்த மணி மேகலை கோவலனின் உரிய மகளென மணிமேகலை ஆசிரியர் "கோவலன் மடந்தை குணதவம் புரிந்தோ ணுவலந் தீவிற் றுன்னி மிக்கோள்" என்பதைக் கச்சிமாநகர் புக்க காதையில் குறிக் கின்றனராதலான் கோவலன் மாதவியோடு வாழ்ந்து பெற்ற

மணிமேகலை கோவலனின் உரிய மகளெனக் கொள்ளக்கிடப்ப தோடு மாதவி கோவலனின் உரிய மனைவி என்பது ஒப்ப முடிந்ததெனவே கொள்ளக் கிடக்கின்றது.

இனி கோவலன் பிரிந்த காலத்து கண்ணகி, மாதவி இவர்கள் மனப்பான்மை இருந்த வாற்றினை ஆராய்வாம்.

கண்ணகியின் பிரிவாற்றாமை. மாதவியை மணந்து அவள் மனையிலேயே வாழ்ந்துவரும் தன் கணவனின் பிரிவாற்றாது கற்பினுறைவிடமாகிய கண்ணகி கவலைக்கடலில் மூழ்கி இருந்தாள். பஞ்சினும் மெல்லிய அவள் பாதங்கள் அழகிய சிலம்பை அறவே மறந்தன; செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறந்தது. மதிபோன்ற திருநுதல் திலகம் இழந்தது. மையிருங் கூந்தல் நெய்யணி மறந்தது. மங்கல அணியேயன்றி மற்றைய அணிகளை மறந்தாள். இளவேனிற் காலத்திற்கு இனிதாக அமைந்திருந்த மணிமுற்றத்தை மேவாது நீங்கினாள். தென்றலும், நிலவும், தன் மாளிகையினுள்ளே புகாவண்ணம் சாளரங்களை எல்லாம் அடைத்தாள். அழகிய கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தையும் சந்தனம் முதலிய வாசங்களையும் வெறுத்தாள். குவளை மலரும் நீலமலரும் மற்றும் நறுமணங்கமழும் மெல்லிய மலர்களும் மணிப்பூஞ்சேக்கையில் சோராதொழிந்தன. காதலன் பிரிவாற்றாது காவிமலர் போன்ற கண்களினின்றும் முத்துப்போன்ற கண்ணீர் சிந்தியவண்ணம் இரவும் பகலும் உறக்கமற்றுத் தன் கணவனின் நினைவாகவே இருந்தனள்.

மாதவியின் பிரிவாற்றாமை. புகார் நகரில் நடந்த இந்திர விழாவின் கடைநாளில் கடலாடுதற்குத் தன் காதலனோடு மாதவி சென்றாள். கடலாடி முடிந்ததும் மனக்கினியவற்றை உண்டு உடுத்து அன்புரையாடி மடலவிழ் தாழையும் புன்னையும் பூத்த நெய்தல் நிலத்தேயமர்ந்திருந்த கோவலன் யாழ் கைக்கொண்டு கானல்வரி பாடத்தொடங்கினான். அவ்வாறு கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருளியலில் களவுத்துறையினால் தலைமகன் கூறிய மொழிகளாயிருந்தமையால் இதையொருவாறு எண்ணிய மாதவி

யும் யாழைவாங்கிக் களவுத்துறையில் தலைமகள் கூறும் மொழிகளைப் பாடினாள். உடனே கோவலன் இவள் மாயப்பொய் பல கூட்டும் மாயத்தவள். வேறு குறிப்புடையவள்போற் பாடினாளென எண்ணிக்கோபக்குறியோடு மாதவியைத் தனியே விடுத்துக் கண்ணகியை நோக்கிச் சென்றனன். இவ்வாறு கடற்கரையில் தனியே விடப்பட்ட பூங்கொம்பு போன்ற மாதவி மனம் பதறி, தன்னை மறந்து செய்வதொன்றுமறியாது ஏங்கி நின்றாள். பிறகு தன் தோழியின் முயற்சியால் தன் வீடு சேர்க்கப்பட்டு மெல்லணை மேல் கிடத்தப்பட்டாள். அங்குமாதவி மெல்லணைமேல் புரண்டும் உருண்டும் நினைந்தும் துன்பப்பட்டாள். திடுமென எதையோ நினைத்தவள் போன்று எழுந்து தன் காதலனுக்கு ஓர் மடலெழுதியனுப்ப நினைந்து மணங்கமழும் அழகிய தாழை வெண்தோட்டில் பித்திகையின் கொழுவிய முகையில் செம்பஞ்சுக் குழம்பைத் தோய்த்துத் தன் பிரிவாற்றாமைத் துன்பத்தின் முற்றாத திறத்தை மழலைச் சொல்லாலே பேசிப்பேசி எழுதித் தன் தோழியினிடம் தந்து "நீ சென்று என் காதலர்க்கு அவர் பிரிவால் யான்படும் துன்பங்களை எடுத்துச் சொல்லி இம்மாலைக்காலம் நீங்குவதற்குள் அழைத்துவா வென விடுத்தனள்.

தொடரும்.

# பஞ்சாபகேசன்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி வெளியீடு.

இச்சங்கத்துக் கல்லூரியினரால் 'கலைமகள்' என்னும் பெயருடன் தொடங்கி நடைபெற்றுவந்த இது, 'கன்றுங் கனியுதவும்' என்னுமாறு இளம் பருவத்திலேயே இச்சங்கத் தொண்டுகள் புரிந்து என்று மழியாத புகழுடம்பை மேவியிருக்கும் ஒரு மதிசால் மாணவரின் நினைவு கூர்தலாக இப்பெயருற்றுக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துக் கல்லூரி 'மாணவர்-ஆசிரியர்'களால் நடைபெற்று வருவது. இதனைத் தொடங்கி நடத்தும் 'மாணவர் ஆசிரியர்கள்' இதுகாறும் அறிஞர்கள் எழுதும் அரிய கட்டுரைகளை முயன்று பெற்று அவற்றைத் தம் கையாலேயே வரைந்து இதன் உறுப்பினர்களுக் கெல்லாம் அனுப்பிவந்தனர். இது போது கட்டுரை எழுதுவாரும் உறுப்பினர்களும் அன்பர்களும் மிகவே, இதனை இவ்விபவ ஆண்டு தைத்திங்கள்முதல் அச்சியற்றி வெளியிடப்புக்கனர். பொங்கல்மல ரெனும் முதன்மலர் இது போது வெளிவந்துளது. இதன்கண் ஆங்கிலத்தில், Our Ideal, The care of the skin, The Hero in Ramanuja எனும் கட்டுரைகளும், தமிழில் கடவுள் வாழ்த்து தமிழ்த் தெய்வ வாழ்த்துச் செய்யுட்கள், வெளிநாட்டு நிருபம் (Letters From abroad) வடமொழி, சேரமான் பெருஞ்சோற்று உதியன்சேரலாதன், துணுக்குகள், வித்து வளர்ச்சிக் கற்பனை, ஒரு அணித்தலைவனுக்கு எழுதிய கடிதம், (Scouting) பெருக்கற்சுருக்கம், (கணக்கு முறைகள்) பொங்கல் வாழ்த்து எனும் கட்டுரைகளும் தோன்றி மிளிர்கின்றன. இதனை அச்சியற்றி வெளியிடுவோர், சங்கக் கல்லூரி மானேசராகிய திருவாளர். M. V. கோபால கிருட்டின ஐயரவர்கள். தமிழ் அன்பர்கள் எல்லோரும் இதனைப் பெற்று மகிழ்ந்து இம்மாணவர்-ஆசிரியர்களை ஊக்கிவருவார்களாக. ஒரு பிரதியின் விலை அணா ஒன்றே. வே.